
டெக்ஸ் வில்லர் துப்பறியும்
பவளச்சிலை மர்மம்!
ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
ரூ-3/-


டெக்ஸ் வில்லர் துப்பறியும்
பவளச்சிலை மர்மம்!
ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
ரூ. 3/-


'எலும்புக் கூடு' பள்ளத்தாக்கின் வடபகுதி யிலிருந்த மேட்டுப் பிரதேசத்தில், கோடை இறுதியில் ஒரு மாலைப் பொழுது...
பவளச்சிலை மர்மம்!
?!
என் பாதுகாவலர்கள் யாருடைய வருகையையோ செவிமடுத் திருக்கக் கூடும்...
க்ரா—க்ரா...
அன்பு சகோதரனே...போய் என்ன விவகாரம் என்று பார்!
க்ரா—க்ரா...
க்ர்ர்...க்ர்ர்


புலிகள்! சீறிக் கொண்டு வருகின்றன!
தயக்கம் கூடாது- முன்னேறுங்கள்!
க்ரா... க்ராரா...
க்ர்ர்...க்ர்ர்
ய்ய்யயாயாஹூஈஈ!
க்ரா—க்ரா...


க்ராஹ் ..
ஆஹ்!


க்ராஹ்
என்னைத் தாக்க வருகிறார்கள்!


தெய்வமே! இந்த பாவ காரியத்தைச் செய்யத் துணிந்தவர்கள் யாரென்று தெரியவில்லையே!


க்ர்ர்ர்—
ஆஹ்!
விடாதே—கொல்!
கொல்!


ய்ய்யாயாஹாசச!
நிறுத்துங்கள்! ஹடானின் புனித பூமியில் இப்படி வெறியாட்டம் போட என்ன தைரியம் உங்களுக்கு?
ஹாய்! மோசமான சாப வார்த்தைகளை ஹடான் உளறிக்கொட்டும் முன் அவனுடைய வாயை அடையுங்கள்!
ஹா! வொல்லைப நாய்களே. கவனமாக கேளுங்கள்!
உங்கள் மனதில் சைத்தான் புகுந்து கொண்டு உங்களை ஆட்டுவிக்கிறது. உடனடியாக ஆயுதங்களைக் கீழே எறிக்—ஹாஆஆஆ...
ம்...சீக்கிரம் வாருங்கள்! இரவு கவிழுமுன் நாம் இங்கிருந்து விலகி வெகுதூரம் சென்றுவிட வேண்டும்!


க்ரா...க்ராரா...
ஆஹ்!
இந்தச் சனியனையும் வீழ்த்துங்கள்!
க்ராரா......
க்ரா— க்ரா...
உள்ளே... ஓடிவாருங்கள்!
இங்கே காணோமே!
அது இங்கேதான் எங்கோஇருக்க வேண்டும்...ஒரு இடம் விடாமல் தேடுங்களடா...முண்டங்களா!


சீக்கிரம் ஆகட்டும்...இருள் கவிழும்போது இங்கே 'எறும்புக் கூடு' பன்னத்தாக்கில் நாம் பின்தங்கி விடுவதை நான்விரும்ப வில்லை.
ஷா-யான்! இங்கே பாரேன்!
நிலவறை கதவு! திறங்கள்!
உள்ளே ஒரே கும்மிருட்டு-பாதாள உலகம் போல்!
தீவட்டியை கொளுத் துங்கள்...
அதையடுத்து—
?!
எறும்புக் கூடுகளின் வாசஸ்தலம்!
அந்த மண்டை ஓட்டின்மீது பார்!


காலினு...!
வண்ணம் பூசப்பட்டு அலங்காரமாக வீற்றிருந்த அந்த மர பொம்மை விகாரமாக இளித்துக்கொண்டிருந்தது
மற்றவர்கள் அசைவற்று நிற்க, ஹாவோல்பை களின் தலைவன் அந்தபொம்மையருகே சென்று அதை உற்று நோக்கினான்...
ஆமாம்! நான் எண்ணிய படியேதானிருக்கிறது!
சில கணங்கள் தயங்கி நின்ற பின் சிலையின் கை-களைப் பற்றி முரட்டுத் தனமாக வகிர்ந்தான்... சட்டென்று திறந்துகொண்டுவிட்ட காலினுவின் உள்ளே ஜோதி வீசும் பளிங்கு விக்கிரகம் ஒன்று தென்பட்டது.
ஆகா-பளிங்கு விக்கிரகம்!
வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்து விட்டது-இனியும் நாம் இங்கே தாமதிக்க காரணமில்லை புறப்படுங்கள்!
சில நிமிடங்களுக்குப் பின், குடிசைக்கு தீ வைத்துவிட்டு ஷா-யானும் அவனுடைய சகாக்களும் அவ்விடத்தை விட்டு விரைந்தோடி மறைந்தனர்...


தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தங்களுடைய குதிரையில் ஏறி 'கடுநீர் கணே' நோக்கிச் செல்லும் தடத்தைப் பின்பற்றி விரைந்தது அந்தக் கும்பல்...
செத்துப் போன ஹடான் கிழவனின் ஆவி நம்மை விரட்டி வந்து இரவில் துன்புறுத்தக் கூடுமல்லவா?
சே-அப்படியெல்லாம் வீணுக கற்பனே செய்து அலட்டிக் கொள்ளாதே!
கிராமத்துக்கு திரும்பி போய்ச் சேர்ந்ததும் காஸினுவை தல்சாரிடம் ஒப்படைப்போம்-நம் சாதனையோடு ஒட்டிக் கொண்டிருக்கும் பாவத்தை கழுவ 'ஓரிகட்' டுக்கு பலி கொடுத்து பூஜை நடத்த அவர் எல்லா ஏற்பாடுகளேயும் செய்வார்... மந்திர தந்திரங்களில் ஹடானுக்கு எவ்விதத்திலும் சளைத்தவரல்லவே அவர்!
'ஓரிகட்' என்பது விடிவெள்ளியாகும்...அமோக விளைச்சல், நல்லவேட்டை, யுத்தங்களில் வெற்றி போன்றவைகளே வேண்டி, பானிக்களும் ,ஹூவால்பைகளும் மற்ற செவ்விந்திய பழங்குடி இனத்தவர்களும் 'ஓரிகட்டு'க்கு ஓர் இளம்பெண்ணே பலி கொடுப்பது வழக்கம்!
ஆனல் ஷா - யான் எண்ணியதுபோல் ஹடான் செத்து விடவில்லை-படுகாயமுற்றதால் சுயவுணர் விழந்து கிடந்த அந்தக் கிழவன் பின்னர் தீயின் வெம்மையால் தூண்டப்பட்டுமயக்கம் தெளிந்து, மிகுந்த பிரயாசையின் பேரில் உருண்டு விலகி பாதுகாப்பான இடத்தை சென்றடைந்தான்...
பாவிப் பயல்கள்...


?!
!
ஹடானின் காகமல்லவா இது!
ஆமாம் டெக்ஸ்! இதன் அலகை கவனி!
உதயசூரியன்-ஹடானின் முத்திரை!
இதன் உடலை ஊடுருவி இருக்கும் அம்பை அகற்றுவோமா?
இல்லை-அதற்கு அவசியமே இல்லை - தன் மாஸ்டரின் செய்தியை நமக்கு தெரிவிப்பதற்காகவே உயிரை வைத்துக் கொண்டிருந்தது போல்— இறந்து விட்டது!
அந்தப்புனித குன்றின் மீது மரணத்தின் நிழல்படிய காரணமானவர்கள் யாரென்று இந்த அம்பைக் கவனித்தாயானால் விளங்கும்.
செந்நிற இறகுகள்-ஹுவேலால்பைகளுடையவை!



அப்பொழுது டெக்ஸ் வில்லரின் மகனும், கிட் கார்சனும் அங்கே வந்து சேர்ந்தனர்—
அதை யடுத்து-
நிச்சயமாக, நீங்கள் காக வேட்டைக்கு சென்று வந்ததாக நாங்கள் நினைக்க வில்லை - பின்னே?
வேடிக்கை விஷயமல்ல! இதை உற்றுப் பார்- உனக்கு ஒன்று நினைவுக்கு வரவில்லை?
ஆமாம்-அடக் கடவுளே! இது ஹடானின் காக மல்லவா! ஹூலேவால் ஸபகள் கொன்று விட் டிருக்கிறார்கள்!
ஆம்-நாம் உடனடியாக 'எலும்புக் கூடு' பள்ளத்தாக்கை நோக்கி விரைய வேண்டியது அவசியம்!
கிளம்புங்கள்- உடனே!
நான் பயப்படுவதுபோல் ஒருவேளை ஹடான் கொல்லப் பட்டிருந்தால் கொலையாளிகளின் தடம் மறைந்து போகுமுன் நாம் அங்கே சென்றடைந் தாக வேண்டும்! இல்லையேல் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விடக் கூடும்!
உங்களுடைய ஆத்திரம் புரிகிறது!
புனித 'காஸினு'வை காவல் காத்து வந்த ஹடானை கொன்ற பாதகர்களுக்கு உரிய தண்டனை வழங்கப் பட்டாக வேண்டும்...
ஆம்...!


நான் போய் நல்ல குதிரைகளை கொண்டு வருகிறேன்...
அப்படியே சண்டை-யிட தேவையானவற்றையும் மூட்டைகட்டி எற்றிவர மறந்து விடாதே!
இம்முறை வேட்டை சரியான சவாலாக இருக்கும்!
உற்சாக மூட்டும் சங்கதி தான்-என்னைப் பொறுத்தவரை!
ஹூவால்பைகள் காட்டுமிராண்டிகள் என்பது என் நெடு நாளைய கருத்து... செவ்விந்திய இனத்தவர் என்று சொல்லிக் கொள்ளவே அரு-கதையற்றவர்கள்!
சென்ற தடவை அதள பாதாளத்துக்கு நேர் மேலே தொங்கவிடப் பட்டிருந்த இரு கூண்டுகளி-னுள் நம்மை அடைத்துப் போட்டுவிட்டுச் சென்ற கிராதகர்களல்லவா அந்த ஹூவால்பைகள்!
அந்த ஈனச் செயலுக்கு சேர்த்து அவர்களை இம்முறை தண்டிக்க வேண்டும் நாம்...
வாஸ்தவம் தான்!
அடுத்த அரைமணி நேரத்திற்குள்ளாகவே, எல்லா வகையான தளவாடங்களோடு குதிரைகளில் பயணத்தை தொடங்கிய அந்த நால்வர் குழு 'எலும்புக் கூடு' பள்ளத் தாக்கை நோக்கி புயல் வேகத்தில் விரைந்தது...
ஹடானே அந்த ராட்சஸர்கள் தாக்க காரணம் என்னவாக இருக்கும்?
நானறிந்தவரை ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்-புனித 'காலிஹு'!
என் யூகமும் அதுவேதான்!


வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது! அந்த புனித விக்கிரகத்தின் அற்புத ஆற்றலை அந்த மடையர்கள் கேள்விப்பட்டிருக்கக் கூடும் - திருட்டுப் புத்திக்காரர்கள் சும்மா இருப்பார்களா?
கை நமைச்சல் எடுத்திருக்கும் - வந்துவிட்டிருப்பார்கள்!
காலினா'வை எங்கே எடுத்துச் செல்கிறார்களோ தெரியவில்லை - ஆனால் அது வெகு தொலைவு செல்வதற்குள் நாம் திரும்ப கைப்பற்றியாக வேண்டும்!
சுலபமான காரியமாக படவில்லை!
அவர்களுடைய பிராந்தியத்தில் மலைக் கணவாய்கள் ஏராளமாக உள்ளன... அந்தப் பகுதியினுள் விஷமிகள் நுழைந்து விட்டார்களேயானால் அதன்பின் அவர்களை கண்டு பிடிப்பது வைக்கோல் போரில் ஊசியை தேடும் முயற்சியாகத்தானிருக்கும்!
இப்படி மனக் கிலேசமடையத் தேவையே இல்லை!
தங்களை நோக்கி தொல்லை வந்து கொண்டிருக்கிற விஷயம் ஹூவால்பைகளுக்கு தெரிய நியாயமில்லை! ஆமாம்... பரிதாபத்துக்குரிய அத்தச் சிறிய பறவை மட்டும் நமக்குசேதி கொண்டுவராவிட்டால் நடந்த அக்கிரமம் வெளியே தெரிய வர எத்தனை நாட்களாகுமோ?
சரியாகச் சொன்னாய்!
இத்தனை சீக்கிரத்தில் விஷயமறிந்து நாம் கிளம்பியது ஒருபுறமிருக்க, நவஜோஸ்களுக்கு விஷயம் தெரியவரும்போது நிச்சயம் அவர்களால் தொல்லை ஏற்படும் என்பதை நன்கறியும் ஹூவால்பைகள் தடையங்களை அழித்து விட்டுத்தான் செல்வார்கள் என்று யூகிக்கலாம்!
வாஸ்தவம் தான்!


தடையங்களை மூடி மறைத்து தங்களுடைய அக்கிரமச் செயலை இரகசியமாக வைக்க அவர்கள் என்னதான் முயற்சியை மேற்கொண்டாலும் உடனடி நட-வடிக்கையை நாம் மேற்கொண்டுவிட்டிருப்பதால் அவர்களுடைய நிலை வலுவிழந்துவிட்டது உறுதி!
கரெக்ட்!


அவர்கள் வந்துபோன தடங்களை கண்-டறிந்து அவர்களை பின்தொடர்ந்து செல்வதில் சிரமம் இருக்கப் போவதில்லை!


இரவு கவிழ்ந்துவிட்ட போதிலும் முழு நிலவின் ஒளி வழிகாட்ட அந்தக் குழு தங்கள் இலக்கை நோக்கி தடங்கலின்றி பயணம் செய்தது...


ஏறத்தாழ மூன்று மணி நேர பயணத்திற்குப் பின்...
வந்துவிட்டோம்! அங்கே மேட்டுப் பகுதியை கவனி!
புகைத்திரள் தீப்பற்றி எரிகிறது என்ன?



என்ன சொல்ல வருகிறாய்...நீ?
குதிரைகளை விரட்டிக் கொண்டு சென்றோமானால் நிஜம் என்னவென்று நொடியில் தெரிந்து விடும்!
ஊஊஊ ஆ ஆ...
ஊஊ ஆ ஆ ஆ ஆ...
கிட்டே வராதீர்கள்...சனியன்களே— தொலையுங்கள்!
ஊஊ ஆ ஆ ஆ ஆ ..
நாடோடியின் உடலை பிறாண்டி கிழித்துக் கொண்டிருக்கின்றனவோ?
சீக்கிரம்! விரைந்து சென்று அந்த பிணம் தின்னி ஓநாய்களின் அட்டகாசத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போம் - வாருங்கள்!


அதைத் தொடர்ந்து இருளின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு தோட்டாக்களின் முழக்கம் எழுந்தது...
டுமீல்! டுமீல்! டுமீல்!
ஆண்டவனே! நான் காப்பாற்றப்பட்டு விட்டேன்!
சில நிமிடங்களுக்குப் பின்—
ஆச்சரியம்! ஹடான் இன்னும் உயிரோடு தானிருக்கிறான்!
நீங்கள் மட்டும் இப்போது வந்து சேர்ந்திராவிடில் அந்த ஓநாய்கள் என்னை கடித்துக் குதறி கொன்று விட்டிருப்பது உறுதி!



நாவொல்பைகள் தானே?
ஆமாம்-வேறு யார் இந்த அக்கிரமத்தை செய்யத் துணிவார்கள்?
அதை கவர்ந்து எடுத்துச் சென்றுவிட்டார்-களா என்று உன்னைக் கேட்பதில் அர்த்தமேயில்லை!
காலிஜனைத்தானே கேட்கிறீர்கள்? உங்கள் கேள்விக்கு பதில் தெரியாது எனக்கு!
அவர்கள் என்னைத் தாக்கியதும் மயக்கமுற்று விழுந்து விட்டேன் நான். சுயவுணர்வு திரும்ப வரப்பெற்றபோது குடிசை பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன்-
சரி-அருகே போய் ஆராய்ந்து விடலாம்!
நான் போய் பார்க்கிறேன் டெக்ஸ்!
அரைகுறையாக எரிந்துகிடந்த சிதிலங்களை சிரமப்பட்டு அப்புறப்படுத்திய டைகர் கடைசியில் நிலவறை கதவை கண்டுபிடித்தான்
கீழே இறங்கிச் சென்ற அவனுக்கு அந்த அற்புத விக்கிரகம் அங்கே இல்லை என்பது நொடியில் தெரியவந்தது.
வெறும் கையோடு திரும்பிச் செல்ல அவர்கள் என்ன மடையர்களா?



காணவில்லையா?
இருந்தால்தான் ஆச்சரியம்!
இருட்டில் தடத்தை கண்டறிந்து விரட்டிச் செல்ல எண்ணுவது மதியீனம் -மீதமுள்ள இராப்பொழுதை பயனுள்ளதாக கழிக்க, முதலில்- நூடானுக்கு தெம்பூட்ட ஏதாவது பருகக் கொடுப்போம்!
நல்ல யோசனை!
இப்போது தேவலாமா- நூடான்?
ஆமாம்! ஆனால் உங்களோடு கிளம்பி வரு- மளவுக்கு என் உடம்பில் தெம்பில்லை!
அதை நான் அறிவேன்! அதிக இரத்த இழப்பு இல்லை என்ற போதிலும் நன்றாக அடிவாங்கியிருக்கிறாய்—மேலும் உன்னை தொல்லைக்கு உட்படுத்த எங்களுக்கு எண்ணமில்லை!
இரண்டு நாளைக்கு தேவையான உணவும், நீரும் கொடுத்துவிட்டுச் சென்றீர்களேயானால் அதுபோதும் எனக்கு உங்களிடமிருந்து வேறு உதவி எதையும் நான் எதிர்பார்க்கவில்லை!



அப்படி உன்னை அநாதரவாக விட்டுச் செல்ல நாங்கள் கிராதகர்களல்ல— நாளை காலை ஹூவெல்பைகளை விரட் டிச் செல்லும் பய- ணத்தை நாங்கள் மேற்கொள்ளுமுன் புகைத் திரள் மூலம் செய்தி— யனுப்பி யாராவது வந்து உன்னை அழைத் துச் செல்ல ஏற்பாடு செய்வோம்!
இப்போதைக்கு இன்னும் கொஞ்சம் மது அருந்தி விட்டு நன்றாக தூங்கி ஓய்வெடுத்துக் கொள்!
நன்றி...!
மறுநாள் பொழுது புலரும் வேளையில் புகைத் திரள் மூலம் சங்கேதமாக செய்தியனுப்பப் பட்டது...
நவஹோஸ் களுக்கு...
ஹிடான் படுகாய முற்று கிடக்கிறான்...
...'எலும்புக்கூடு' பள்ளத்தாக்கின் மேட்டுப் பிரதேசத்தில்...
நீங்கள் நால்வர் மட்டும் ஹூவெல்பைகளை விரட் டிச்செல்வது சரியாகப் படவில்லை எனக்கு... மற்றவர்கள் வரும்வரை பொறுத்திருந்து...
வீண் கால விரயம்- காரியத்தை... கெடுத்துவிடும்!
மகிமை வாய்ந்த விக்கிரகத்தை மீட்டுவர நாங்கள் நால்வரே போதும்.



பெருங் கூட்டமாக சென்றால் ஹூவொல்பைகளின் கவனத்தை அது ஈர்த்துவிடும்... சுதாரித்துக் கொண்டு அவர்கள் மலைக் கணவாய்களினூடே சென்றுவிட்டார் களென்றால் அதன்பின் அவர்களை கண்டுபிடிப்பது சாத்தியமில்லாமல் போய்விடும்!
நால்வரும் பயணத்தின் இறுதிக் கட்டத் தில் தனித்தனியே பிரிந்து செல்லப் போகிறோம் அவர்க ளுடைய இருப்பிடத் தை சுற்றி காவல் நிற்கும் வீரர்களின் கவனத்தை ஈர்க்கா மலிருக்கவே அப்படி யொரு திட்டம்.
ஊம்...!
அதுவும் சரிதான்! ஆனாலும் எனக்கென் னவோ மனது கேட்க வில்லை- இன்னும் ஒரு பத்து வீரர்களை உடன் அழைத்துக்கொண்டு போனீர்கள் என்றால் நல்லது என்பது என் அபிப்பிராயம்...
இது இருக் கிறது எனக் குத் துணையாக!
இதனுள் சிறு ஈய குண்டுகளின் வடிவில் சக்திவாய்ந்த பதினாறு வீரர்கள் இருக்கி றார்கள்... ஹூவொல்பைகளுக்கு மரணத்தை அறிமுகம் செய்துவைக்க துடித்துக் கொண் டிருக்கிறார்கள் இந்தக் கில்லாடிகள்!
டெக்ஸ்...! கிளம்புவோம்- வா!


நாம் அனுப்பிய சமிக்ஞைகளை நவஜோ இடையர்கள் வாங்கிக் கொண்டார்கள்- விரைவிலேயே கிராமத்திலிருப்போருக்கு செய்தியை தெரிவித்து விடுவார்கள்
நல்லது!
சிலமணி நேர இடைவேளைக்குப் பின் உன்னருகே ஆற்றல்மிக்க இருபது வீரர்களாவது வந்து நிற்பார்கள்.
நன்றி!
உங்கள் முயற்சி வெற்றியடைய என் வாழ்த்துக்கள்!
மீண்டும் உன்னை விரைவிலேயே சந்திப்போம். நடான்!
விடைபெற்றுக் கொள்கிறோம்!
யாயயா ஆ ஆஹீஈஈ!
பிரிந்து கொள்வோமா?
பள்ளத் தாக்கை கடந்தபின் ஆலோசிப்போம்!



அந்த நரிக்கும்பல் சென்ற தடத்தை கண்டறிந்த பின் பாறைகள் நிறைந்த பாலைவனப் பகுதிவரை சேர்ந்தே செல்வோம். அதன்பின் நால்வரும் வெவ்வேறு பாதைவழியாக முன்னேற வேண்டும்...
ஹாவெல்லைகளும் இப்படி ஏதாவது சமயோசிதமாக செய்யமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?
எதற்கும் நாம் தயாராகத் தானிருக்க வேண்டும்!
இதற்கிடையே, கிராண்ட் கணவாயில் தெற்கே மேட்டுப்பகுதி ஒன்றில்...
அதோ... திரும்பி வருகிறார்கள்!
என்ன?
வித்தியாசமாக எதுவும் கண்ணில் படவில்லை-
செங்குன்றுகளின் இடையேயும் அதையடுத்த பாறைகள் நிறைந்த பாலைவனப் பகுதியையும் சோதித்துவிட்டோம்... வானில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் கழுகுகளைத் தவிர வேறு எந்த உயிரினமும் கண்ணில் படவில்லை!
நல்லது...!


இனி நிம்மதியாக பயணத்தைத் தொடரலாம்—
ம்...கிளம்புங்கள்!
மேட்டுப் பகுதியிலிருந்து கீழிறங்கிய அந்த ஹவாசுபை கூட்டம் வடதிசை யில் பயணத்தை தொடர்ந்தது...
சிலமைல் தூரம் கடந்தபின், அங்கிருந்த நூற்றுக்கணக்கான மலைக் கணவாய் களில் ஒன்றினூடே புகுந்து போய்க் கொண்டிருந்தனர்...
அஸ்தமன வேளையில்...
நில்லுங்கள்! அடுத்து வரவிருக்கும் 'வானவில்' பாலத்தின் மீது இருட்டு வேளையில் பயணம் செய்வது ஆபத்து... இரவை இங்கே கழித்துவிட்டு விடிகாலையில் பயணத்தை தொடரலாம்!
சரியான யோசனை!


தீயை மூட்டுங்கள்! நம் எல்லையினுள் வந்துவிட்டோம்— இனி, ஒரு பயல் நம்மீது கைவைக்க முடியாது!
தொடர்ந்து பயணம் செய்து 'காக கணவாய்' சென்றடைந்து விட்டால் கிராமத்துக்கு சமிக்ஞை அனுப்ப இயலும்!
கிறுக்கனைப் போல் உளருதே, மாகெனர்!
நம் சக்தியனைத்தையும் திரட்டி வேகமாக சென்றாலும் நன்றாக இருட்டிக் கொண்டு விடுமுன் 'வானவில்' பாலத்தை சென்றடைவது சாத்தியமேயில்லை! உயிர் மீது ஆசையில்லாத பைத்தியக்காரன்தான் இருட்டில் அந்தப் படுபயங்கரமான தொங்கு பாலத்தின் மீது பயணம் செய்யத் துணிவான்!
அதுவும் சரிதான்!
கானிறையை நீ எடுத்து காண்பிக்கும்போது என் மாமாவின் முகத்தில் மின்னப்போகும் மகிழ்ச்சியை எண்ணிப் பார்த்தேன்... அது சீக்கிரமே சம்பவிக்க வேண்டுமென்ற அவாவினால் தான் அப்படிச் சொன்னேன்!
அதனாலென்ன! நாளை உச்சி பொழுதுக்குள் அந்த அரிய காட்சியை காணும் வாய்ப்பு உனக்கு கிடைக்கத் தான் போகிறது!
கானிறையினுள்ளே உறையும் புனித விக்கிரத்தை அவர் மட்டுமே பார்ப்பார்- அந்த விக்கிரத்தினால் விளையும் பில்லி சூனிய விளைவுகளை, ஆற்றல் மிக்க மந்திரக் கோலை கையில் வைத்திருக்கும் அவரால் மட்டுமே சமாளிக்க முடியும்!
அப்படியொரு விபரீத சக்தி பளிங்கு விக்கிரகத்திடம் இருப்பதாக நீ நம்புகிறாயா?


ஆம்-தவருக கையாண்டால் அதனுள் உறையும் தீயசக்தி பேராப த்தை விளைவிக்கக் கூடும்... ஆனல் எந்த விளைவுகளையும் சமாளிக்கும் ஆற்றல் தல்சாரிடம் உண்டு!
ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம்! புனிதப் படுத்தும் சடங்கு நடந்து முடியும் வரை விக்கிரகம் காஸினுவினுள்ளேயே அடைபட்டுக் கிடப்பதுதான் நல்லது!
ஓகே!
அளவான. இரவு உணவு சாப்பிட்டானதும் புனித காஸினுவை யார் யார் முறை வைத்து காவல் காத்து நிற்பது என்ற விஷயத்தை ஷா-யான் தீர்மானித்தான்.
யாரும் நம்மை தாக்கும் அபாயம் இல்லைதான் என்ற போதிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது!
முதலில் நான் காவல் நிற்கிறேன்!
முன்னிரவில் எந்த அசம்பாவிதமும் நிகழவில்லை... ஒருவர் மாறி ஒருவர் காவல் காத்து நின்றனர்— மாகெனரின் முறை வந்தபோது எதிர்பாராத விப ரீதம் ஒன்று நிகழ்ந்தது...
ஷா-யான் பயப்படுவதில் அர்த்தமேயில்லை!
ஹடானின் குடிசையிலிருந்த நில- வறையினுள் நானும்தான் சென் றேன்...ஷா-யான் கூடத்தான் அப்போது காஸினுவை திறந்து பளிங்கு விக்கிரகத்தைபார்த்தான். அவனுக்கு ஒன்றும் விபரீதமாக நேரிட்டு விடவில்லையே!


தல்சாரின் மருமகனான எனக்கு மட்டும் விபரீதம் நிகழ்ந்துவிட காரணம் எதுமில்லை!
காலிறுவை கையிலெடுத்த மாகெனர் நிமிடநேர தயக்கத்திற்குப் பின் அதை திறந்தான்...
?!
வெளிப்பட்ட பளிங்கு விக்கிரகம் தன்மீது படிந்த முழு நிலவின் கிரணங்களை அதீதமாக பிரதி—பலித்து. அதனுள் ஏதோ ஒளிப்பிழம்பு கிளர்ந்தெழுந்தது போல் ஒளிர்ந்தது...
?!
அற்புதம்...!
உதய சூரியனின் கிரணங்களைப் போல் ஒளிர்கிறது!
இதை கையில் பற்றிக் கொண்டிருக்கும்போது அதீத சக்தியும் வீரியமும் என் உடம்பை ஊடுருவுவதை என்னால் தெளிவாக உணர முடிகிறது... இந்த விக்கிரகம்அற்புத ஆற்றல் படைத்தது தான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை எனக்கு!


ஓ...சக்தி வாய்ந்த விக்கிரகமே! எனக்கு வரம் கொடு...ஷா-யானின் மரணத்துக்குப் பின், இரைச்சலோடு பாய்ந்தோடும் கொலராடோ நதியோரத்து ஹூவால்பை இனத்தின் வலிமை வாய்ந்த தலைவனாக நான் வர வேண்டும்!
உணர்ச்சி வயப்பட்டு இறைஞ்சினான் மாகௌர்...
மீண்டும் விக்கிரகத்தை உள்ளே வைத்து மூடி அதை பாறையின்மீது வைக்க மாகௌர் முயன்றபோது அவனுடைய உடல் நடுங்கத் தொடங்கியது...
?!
கதறி ஓலம் எழுப்பக்கூட திராணியற்று, வெட்டப்பட்ட அடிமரம் போல் அப்படியே தரையில் சரிந்தான் மாகௌர்.
ஆ...வ்!
?!
என்ன ஆயிற்று... மாகௌருக்கு?
?!
?!
வா...வ்—செத்துப் போய்விட்டான்!


சூடான இரும்புத் தடியை பற்றியது போல் இரண்டு கைகளிலும், கொப்பளங்கள் ஏற்பட்டிருக்கின்றன— பாருங்கள்!
என்ன அசம்பாவிதமோ தெரியவில்லையே!
அங்கே...காஸினுவை பாருங்கள்!
!!!!
!!!
பாதி திறந்த நிலையிலிருக்கிறது!ஒளிக் கதிர்கள் வெளிப்பாய்ந்து கொண்டிருப்பதாக தோன்றுகிறது!
?!
ஓடிச் சென்று அதை மூடு...சீக்கிரம்!
விக்கிரகத்தைபார்க்கும் ஆவலால் தூண்டப் பட்டு மாகெளர் காஸினுவை திறந்திருக்கக்கூடும்...அப்போது உள்ளிருக்கும் சூனிய சக்தி அவனை தாக்கி வீழ்த்தியிருக்க வேண்டும்!



வா-வ்! விக்கிரகம் உமிழும் ஒளிக்கதிர்கள் ஏதோ தீய தேவதையின் விழிகளைப் போல் மின்னுகின்றன!
தீயை அண்ணா-நாம் இங்கிருந்து போய் விடலாம்!
இன்னும் விடிய நேரம் இருக்கிறது என்ற போதிலும் துரதிர்ஷ்டம் பிடித்த இடத்தில் இனியும் இருக்கலாகாது!
மாகௌரை என்ன செய்வது?
மாகௌர் தல்சாரின் ஒரே மருமகன்... மரணக் குன்றுக்கு அவனுடைய உடல் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று தல்சார் விரும்பக்கூடும்!
இல்லை-தீய சக்தியால் மரணம் சம்பவித்திருக்கிறது மாகௌருக்கு! நம்மில் யாரும் அவனுடைய உடலை தொட்டாலும் கெடுதல் சம்பவிக்கும் அபாயமுண்டு!
உடலின் மீது கற்களை அடுக்கி மூடிப் போட்டுவிட்டுச் செல்லலாம்!
சரி!
அடுத்த அரைமணி நேர இடைவெளிக்குப் பின் அந்தச் சிறு கும்பல் தன் பயணத்தை தொடர்ந்தது...




பொழுது புலரும் வேளையில், கொலராடோ நதியின் உபநதி ஒன்றின் குறுக்கே இருகரைகளையும் இணைத்து நின்ற தொங்கு பாலத்தை நெருங்கி விட்டிருந்தனர்...
விரைந்து நடங்கள்... ஒருவர் பின் ஒருவராக நன்றாக இடைவெளி கொடுத்து செல்லுங்கள்.. பாலம் பாதுகாப்பானதல்ல!
ஏறத்தாழ அதே வேளையில்...
எழுந்திருங்கள்... தோழர்களே!
ஏன்-இப்படி கத்துகிறாய்!
ஆடம்பரமான உணவு விடுதி ஒன்றில் எனக்கு எதிரே மேஜை மீது கறியும் உருளைக்கிழங்கும் தயாராக இருப்பதாக கனவுகண்டு கொண்டிருந்தேன்- கலைத்து விட்டாய்!
பரிதாபம் தான்... அங்கிள்!
பரிகாரமாக சூடாக காப்பி தரட்டுமா?


முழு ஆறுதல் தரப்போவதில்லை அது...! தின்ன ஏதும் இல்லாத நிலையில் வெந்நீர் போன்ற அந்தப் பானம் என்ன சந்தோஷத்தை கொடுத்து விடப்போகிறது?
விருந்துண்ண இதுவா சமயம்...!
கையிருப்பிலுள்ள உணவுப் பொருளை சிக்கனமாக பங்கு போட்டுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் .. வேட்டையாடலாமென்று பார்த்தால் இந்தப் பிராந்தியத்தில் எந்த மிருகமும் கண்ணில் படக்காணோமே!
சரியான வாய் சவடால் பேர்வழி...நீ!
கால தாமதமின்றி அந்த ஹீவால்பை பன்றிகளை விரட்டிப் பிடிக்கத் தவறினோமேயானால் கொளுத்தும் வெய்யில் நிலவும் இந்தப் பகுதியில் எலும்பும் தோலுமாகப் போய்விடும் அபாயமுண்டு.
சும்மா அலட்டிக் கொள்ளாதீர்கள் அங்கிள்...! சரியான தடத்தில் பின் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறோம்... அவர்களும் அதிக தூரம் சென்றிருக்க முடியாது...!
வடதிசையில் அவர்கள் சென்றிருக்கக் கூடும்... சில தடங்களே அங்குள்ளன!
பதுங்கியிருந்து தாக்கும் எண்ணம் அவர்களுக்கு இருக்குமேயானால் நாம் வகையாக சிக்கிக்கொண்டு விடுவது நிச்சயம்!
வீண் கற்பனை செய்து கொண்டு குழப்பிக் கொள்ளாதே!
அதோ அந்த மேட்டை சென்றடைந்ததும் நாம் தனித்தனியாக பிரிந்து செல்லலாம்...ஹே— அங்கே வட்டமிடும் கழுகுக் கூட்டம் உங்களுக்கு உணர்த்துவதென்ன?


அந்த இயற்கை மொழியை புரிந்து கொள்வதில் சிரமமே கிடையாது. நம்மில் யாராவது சென்று விஷயம் என்னவென்று கண்டறிந்து வருவது நல்லது!
நான் போகட்டுமா?
வேண்டாம்... எல்லோரும் சேர்ந்தே போவோம்; அங்கே வேறு எந்த அபாயமும் இருக்க முடியாது— இல்லையேல் கழுகுகள் இத்தனை தாழ்வாக பறக்க மாட்டா!
சில நிமிடங்களுக்குப் பின் நால்வரும் கிளம்பினர்.
சுமார் அரைமணி நேரத்திற்குப் பின் முதல் நாள் இரவு ஹீவால்பைகள் முகாமிட்டிருந்த இடத்தை வந்தடைந்தனர்.
கழுகுகளின் நடமாட்டத்திற்கு காரணம் இப்போது தெளிவாகிவிட்டது!
பிணத்தை கற்கள் மூடிக் கொண்டிருப்பதால் அவற்றிற்கு தீனி எதும் கிட்டியிராது...
ம்... என்னதான் விபரீதம் நிகழ்ந்ததோ தெரியவில்லை?
கஷ்டமான கேள்விதான்!


திருட்டுக் கும்பல் நேற்றிரவு இங்கே தங்கி விட்டு விடியும் முன் கிளம்பிச் சென்றிருக்கிறார்கள் என்று யூகிக்க முடிகிறது—சாம்பல் நன்றாக ஆறி விட்டிருக்கிறது!.
தடம் புலப்படுகிறதா?
வடக்கு நோக்கிச் செல்கிறது... மாலைப் பொழுதுக்குள் நாம் அவர்களை பிடித்துவிட முடியும் என்று நம்புகிறேன்!
வாய்ப்பிருக்கிறது!
யாரும் தங்களை பின் தொடர்ந்து வருவதாக கொஞ்சமும் சந்தேகிக்காத ஹீவால்பைகள் தடங்களை அழிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேயில்லை என்று தோன்றுகிறது!
நமக்கு சாதகம்தான்!
தங்களுடைய கிராமத்தை அவர்கள் சென்றடையும் முன் பிடித்துவிட முடிந்தால் தேவலை!
எந்த இனத்தவர் என்பதை பொறுத்தது!
அவர்களுடைய குடியிருப்புக்கள் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கின்றன...
GRAND CANYON
HUALPAI
COLORADO RIVER
INDIAN RESERVATION


அப்பே சமவெளியில் வாழும் இனத்தவராக காலினு திருடர்கள் இருந்துவிட்டால் நம் பணி சுலபமாக இருக்கும்...
அப்படியே நம்புவோமாக... ஏனெனில் கொலராடோவுக்கு அப்பால் சென்று தேடும் முயற்சி எனக்கு அவ்வளவாக இஷ்டமில்லாத ஒன்று!
எனக்கு மட்டும் அதில் இஷ்டமா, என்ன! வேறு வழியில்லாமல் போனால் என்ன செய்வது?
விடாது தொடர்ந்து விரட்டிச் செல்வது ஒன்றுதான் இப்-போதைக்கு வெற்றியை உறுதி செய்யும் உபாயமாகும்
நரிவால்பைகளை பிசாசுகள் ஒட்டு மொத்தமாக விழுங்கி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?
தடத்தை கவனமாக பின்பற்றி பயணம் செய்து வந்த அந்த நால்வர் குழு, விடிகாலை பொழுதில் 'வானவில்' தொங்கு பாலத்தருகே வந்து சேர்ந்தது.
இங்கிருந்து கால்நடையாக பாலத்தை அவர்கள் கடந்திருக்கக் கூடும்!



நாமும் கால்நடையாகத் தான் பாலத்தைக் கடக்க வேண்டும்...
ஏன்.. குதிரைகள் பாலத்தில் செல்ல முடியாதா என்ன?
பாலம் இருக்கிற நிலையில் நம் எடையையாவது தாங்குமா என்ற சந்தேகம் எனக்கு!
?!
பக்கவாட்டில் பற்றிக்கொள்ள கயிறு கூட இல்லை... நாம் காலடி வைத்ததும் சரிந்து விழாதவரை அதிர்ஷ்டம் செய்த வர்கள் தான் நாம்!
சுருங்கச் சொன்னால், இந்தப் பாலத்தின் மீது பயணம் செய்ய நேரிட்டிருக்கும் நிர்ப்பந்தம் விரும்பத்தகாத ஒன்று!
தைரியத்தை கைவிடாதீர்கள்! குதிரை களின் மீதுள்ள மூட்டைகளை கையில் எடுத்துக் கொண்டு, வழியில் நாம் தாண்டி வந்த திறந்த வெளி பகுதி யில் கொண்டு போய் அவற்றை விட்டு வர வேண்டும்.
புல்லும், தண்ணீரும் அங்கே தாராளமாக கிடைப்பதால் நாம் திரும்பி வரும்போது நிச்சயம் கழுகுகளுக்கு இரை யாகி விடாமல் நம் குதிரை கள் உயிரோடு ஜீவித் திருக்க வாய்ப்பிருக்கிறது...
நாம் திரும்பி வருவோமா என்ப தில்தான் சந்தே கம் இருக்க முடி யும்.. அப்படித் தானே!



உளருதே .....! ஹீவால்பைகள் என்ணிக்கையிலும் அதிகமில்லே— அவர்கள் வசம் வில்லும் ஊது துப்பாக்கியும் மட்டுமே ஆயுதங்களாக உள்ளன... நமக்கு வெற்றி வாய்ப்பு ஏராளம்!
அம்பு முதுகில் பாய்ந்தால் மட்டும் உயிர் போகாதா என்ன?
எச்சரிக்கையோடு சென்றால் எந்த ஆபத்தும் வராது!
அப்படியே நம்புவோமாக?
குதிரைகளை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு விட்ட பின், டெக்ஸ், கார்ஸன், கிட், டைகர் நால்வரும் சிதில மடைந்து கிடந்த தொங்கு பாலத்தில் நடந்தனர்...
ஒருவாறாக மறு கரையை சென்றடைந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.
ச்சூ... சின்ன விஷயத்தை யெல்லாம் பெரிது படுத்திக் கொண்டு—
அப்பாடா என்றிருக்கிறது எனக்கு!
பாலமா அது— 'சீ–சா' பலகை! மறுபடியும் இதன் மீது ஒருமுறை செல்ல வேண்டும் என்ற எண்ணமே அடி வயிற்றை கலக்குகிறது!


இதன் வழியாக திரும்பிச் செல்லுமுன் நன்றாக சோதித்து விடவேண்டும்...
ஒப்புக் கொள்கிறேன்...! —சரி... சரி .. நடங்கள்!
இனி பிரிந்து செல்வோமா?
ஆமாம்... அதுதான் சரியான யுக்தி!
நீயும் டைகரும் தடத்தை பின்பற்றி முன்னால் செல்லுங்கள்... கார்ஸனும் நானும் உங்களுக்கு பாதுகாப்பாக பின் தொடர்ந்து வருகிறோம்!
அப்படியே செய்யலாம்!
இதற்கிடையே, சுமார் பதினைந்து மைல்களுக்கு அப்பால்...
ஷா—யான் திரும்பி விட்டார்,
அப்படியா மங்கள முரசுகள் நல்வரவு கூறி முழங்கட்டும்!
டும் டும் டும் டும்
யாயாஹீசா...



ம்.. ஷா-யான் கையில் தூக்கிக்கொண்டு வருவது புனித காஸினாவாகத்தானிருக்கும் ஆனால் என் மாகெளரை அவர்களிடையே காணோமே—ஏன்?
இம்மாதிரி வெற்றிக்கு யாரை பலி கொடுப்பது?
என் எச்சரிக்கையையும் மீறி காஸினாவைத்- திறந்து விக்கிரகத்தை பார்க்க முயன்ற மாகெளரை உள்ளிருந்த தீய சக்தி வீழ்த்திக் கொன்றுவிட்டது .. மேன்மை மிகு துல்சார் அவர்களே!
அடுத்து—
மாகெளரை காணோமே?
நவஜோ மந்திரவாதியின் புலிகளோடு மோத நேரிட்ட போது நம் வீரர்-களில் இருவர் உயிரிழந்து விட்டனர்...அவர்களுடைய உடல்கள் இன்னமும் அங்கே எலும்புக் கூடு' பள்ளத்தாக்கில் குன்றின் அடி வாரத்தில் கிடக்கின்றன...!
ஐயகோ...! காஸினாவை கவர்ந்து வந்த நீ மரண செய்தியையும் கொண்டு வந்து என் குடிமையின் மீது கரு நிழல் படியச் செய்து விட்டாயே ஷா-யான்!
இறந்தது மாகெளர் மட்டுமல்ல !


அப்படியானல் வெறும் புனிதச்சடங்கு மட்டும் போதாது .. காஸினைத் திறந்து விக்கிர-கத்தை வெளிக்கொணருமுன் 'ஓரிகட்'டின் பாதுகாப்பையும் நாடிப் பெறவேண்டியது அவசியம்!
உத்தரவிடுங்கள்... தேவையான ஏற்-பாடுகளை உடனே செய்து விடுகிறோம்!
உடனே ஏற்பாடுகளை தொடங்குங்கள்... எல்லா இளங் குமரிகளையும் அழைத்து வந்து என் குடிசையின் முன் வரிசையாக நிறுத்துங்கள்!
ஆகட்டும்!
கவனமாக கேட்டுக் கொள்! பலிக் கம்பத்தை நட்டு, முரசுகளை அறைந்து, விடி-வெள்ளி துலங்கும் விண்-வெளிக்கு, பலி கொடுக்க இருக்கும் செய்தி எட்டச்செய்.
ரொம்பவும்தான் எங்களை நீ சோதித்து விட்டாய்! ஆனல் இனி நீ எங்களிடம்தான் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கப் போகிறாய்!
அஸ்தமன வேளையில், நீ கை மாறிய களங்கம் நீங்க இளங்குமரியின் இரத்தம் சிந்தப் போகிறது இங்கே..! அதன்பின் இந்தப் பிராந்தியத்தில் நான்தான் சர்வ வல்லமை படைத்த மாந்திரீகனாக விளங்குவேன்!


அதே வேளையில்,....... அங்கே—
இதோ...நிறைய காலடி தடங்கள்...!
திருடர்கள் அப்ரே சமவெளியை சேர்ந்த ஹூவாலபைகள் என்று இனம் காட்டுகின்றன இவை!
தடங்களை அழிக்க எந்த முயற்சியையும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லையாதலால் நாம் பின் தொடர்ந்து வரும் உண்மையை அவர்கள் அறியவில்லை என்றாகிறது!
நம்மை பொறியில் சிக்க வைக்கும் தந்திரமாகவும் இருக்கலாமல்லவா?
அப்படி சந்தேகிக்க இடமில்லை ......ஏனெனில் அந்த திருடர்கள் ...
முரசொலி! வெகு தொலைவிலிருந்து வருகின்ற போதிலும் அதன் எதிரொலியை தெளிவாகவே கேட்க முடிகிறது!
அது வரும் திசை நான் முன் சொன்ன படி, திருடர்கள் அப்ரே பகுதி ஹூவால்பைகள்தான் என்று உறுதிப்படுத்துகிறது!
டம்! டம்! டம்!



ஏதோ விழா நடக்கப் போவதை அறிவிக்கும் முரசொலி அது என்று தோன்றுகிறது! நாமும் அந்த விழாவில் கலந்து கொள்வோமா......!
மரணத்தின் வரவை அறிவிக்கும் முரசொலி யாக இருந்துவிட்டால்...?
அப்படியும் இருக்க வாய்ப்புண்டு! நான் கேள்விப்பட்டவரை இன்னமும் அந்த காட்டு மிராண்டிக் கூட்டம் விடிவெள்ளியான ' ஓசிகட்டை' மகிழ்விக்க நரபலி கொடுக்கும் அசிங்-கமான வழக்கத்தை கடைப்பிடித்து வருகிறது!
காளினு கவர்ந்து வரப்பட்டிருப்-பதால் இப்படியொரு சடங்கு நடத்த வேண்டிய முகாந்-திரம் ஏற்பட்டிருக்கக்கூடும் ......
அநியாயம் ! இன்று மாலை ஹுவால்பை குடும்பம் ஒன்றில் துயரம் நிரந்-தரமாகிவிடும்! பாவம் நிகழவிருப்பதை தடுக்க முடியாதா?
அந்தக்கெட்டவேளை வருமுன் நாம் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டால் கிராம மாந்திரீகனின் திட்டத்-துக்கு முடிவு கட்டிவிடலாம்
விரைந்து செல்வோம்... வாருங்கள்!
அனுப்பிவிட்ட அந்த கொலை-காரக் கும்பலை பழிவாங்கும் தருணம் விரைந்து வரவேண்டு-மென துடிக்கிறேன்!


இதற்கிடையே ...
பலிக்கம்பம் ஏறத்தாழ தயாராகி விட்டது, தல்சார்!
பலி கொடுக்கப்படவேண்டிய நபரை தேர்ந்தெடுக்க வேண்டிய வேளை வந்துவிட்டது!
குடிசையினுள் சென்ற மாந்திரீகன் பானை ஒன்றினுள் ஒன்பது வெள்ளை கற்களையும் ஒரு கருங்கல்லையும் போட்டான்.
...பின்னர் எதிரே வரிசையாக நின்ற இளங்குமரிகளிடம் சென்றான்.
ஆளுக்கு ஒரு கல்லை எடுத்து உள்ளங்கையில் மறைத்து வைத்து மூடிக் கொள்ளுங்கள்
நடக்கப் போவது என்ன என்பதை நன்கு அறிந்திருந்த அந்தப் பெண்கள் நடுங்கியவாறு சொன்னதை செய்தனர். அதன் பின்...
ம்... இப்போது உள்ளங்கையை விரியுங்கள். 'ஒரிகட்' யாரை தேர்ந்தெடுத்திருக்கிறது என்று தெரிந்து கொள்வோம்!



அச்சத்தோடு ஒவ்வொரு பெண்ணாக கையை விரித்தனர்... ஆறாவதாக நின்றிருந்த பெண்ணிடம் கருப்புக்கல் இருந்தது.
!?
! இழுத்துச் செல்லுங்கள் இவளை!
ஐயோ...!
இப்படி அலறி 'ஒரிகட்'டின் சாபத்துக்கு ஆளாகாதே! மற்றவர்களுக்கு கிடைக்காத அரிய வாய்ப்பு உனக்கு கிட்டியதற்காக நீ பெருமைப்படவல்லவோ வேண்டும்!
...அஸ்தமன வேளையில் கருப்பு அம்புகள் உன் உடலின் மீது பாய்ந்து உடலை இருண்ட பாதாளத்துக்கும்,உயிரை 'விடிவெள்ளி' தேவதைக்கும் அனுப்பி வைக்கும்!
!!
அந்த இளம் பெண்ணின் விழிகளில் மரண பயம் நிழலாடியது...
இவளைக் கொண்டு போய் பலிக் கம்பத்தில் பிணையுங்கள், புனித சடங்கில் பங்கேற்க தகுதி படைத்த ஏழு வில்வித்தை வீரர்களை தேர்ந்தெடுங்கள்.
ஆகட்டும்...!



இன்றைய இரவு அப்ரே பகுதி வாழ் ஹீவால்பைகளுக்கு ஒரு பொன்னான இரவு என்று மற்ற இடங்களில் வாழும் பிற ஹீவால்பை இன மக்கள் அறியுமாறு முரசு அறையச் சொல்...!
சரி!
நன்கு அலங்கரிக்கப்பட்ட அந்த அப்பாவிப் பெண்ணை பலிக் கம்பத்தோடு பிணைத்துக் கட்டினார்கள்...
தல்சாரின் ஆணைப்படி தொடர்ந்து அறையப் பட்ட முரசுகளிலிருந்து எழுந்த ஒலி அப் பிராந்தியம் முழுவதும் எதிரொலித்தது...
எல்லா ஹீவால்பை இன மக்களுக்கும்...
அறிவிப்பதாவது... என்னவென்றால்...
அப்ரே பகுதி வாழ
ஹுவால்பைகளுக்கு
இன்றைய இரவு புனிதமான
இரவாகும்...
ஒரிகட்' தேவதைக்கு நரபலி கொடுக்கும் புனித
வேளையில் யாருடைய
இடையூறையும் நாங்கள் சகித்துக்
கொள்வதற்கில்லை...


அதே சமயம்—வெகு அண்மையில்...
கேட்டாயா?
எதிர்பார்த்ததுதானே!
காலிஞவை திருட மூன்று உயிர்களை பலிகொடுக்க நேரிட்டதால் தேவதையின் கோபத்தை தணிக்க...
...இப்போது இன்னொரு பலி கொடுக்கப்போகிறார்கள்!
ஹூம்! நாம் தக்க தருணத்தில் அங்கே போய்ச் சேர்ந்து விடவேண்டும்!
டைகர்... உன் கருத்தென்ன?
எதையுமே நம்பிக்கையோடு எதிர்-பார்ப்பவன் நான்! எதிரொலியை வைத்து கணித்தால் அந்தக் கிராமம் அதிக தொலைவில் இராது. மேலும், பொதுவாக சூரிய அஸ்தமனத்தின் போதுதான் பலி கொடுப்பது வழக்கமாதலால் நாம் அங்கே போய்ச் சேர போதிய அவகாசம் இருப்பதாக கருதுகிறேன்!



உன் வாக்குப்படியே நடக்கட்டும்!
நாம் வெற்றி கொள்வது உறுதி .. கார்ஸன்!
இதற்கிடையே...
மையத்தில் அதை வையுங்கள்!
பலி கொடுப்பவர்களை நோக்கி முகம் இருக்குமாறு அந்த புலித்தோலை அதன் மீது விரியுங்கள்!
டம்-டம் டம்



தீவட்டிகளை கொளுத்த ஏற்பாடாகட்டும் ... அஸ்தமன வேளை நெருங்கிவிட்டது!
ஆகா...! விரைவிலேயே நீ புனித மடைந்து விடுவாய் அதன் பின் இந்தப் பிராந்தியத்திலேயே சர்வ வல்லமை படைத்த மாந்திரீகனாகி விடுவேன் நான்!
அங்கே—
டம்-டம்-டம்
நாம் எதிர்பார்த்ததை விட கிராமம் மிக அண்மையில் இருக்கிறது.
இப்போது நம் ஆயுதங்களின் செயல்திறனை சோதித்துக் கொண்டு விடுவது நல்லது!
விவேகமான செயல்!


நான் முன்னால் சென்று அங்கே என்னதான் நடக்கிறது என்று பார்த்து வரட்டுமா?
அருமையான யோசனை!
ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டால், பெரிய ஹீரோ மாதிரி எண்ணிக் கொண்டு விபரீதமாக எதையாவது செய்து தொலைக்காதே!
ஊஹீம்... அப்படி யெல்லாம் தப்பு பண்ண மாட்டேன்— என்னை நம்பலாம்...?
பொறு... டைகர்— எதற்கும் நானும் உன்னோடு வருகிறேன்.
இரு கண்களை விட நான்கு கண்கள் தெளிவாகப்பார்க்கக் கூடும்... இப்படியும் சொல்லலாம்— ஒரு துப்பாக்கியை விட இரண்டு துப்பாக்கிகள் அதிக நாசத்தை விளைவிக்க முடியும்!
ஆபத்தை நோக்கி செல்கிறீர்கள்— எச்சரிக்கையோடு செல்லுங்கள்...!
டம்-டம்-டம்-டம்


தீவட்டிகள் நடப்பட்டு விட்டனவா? சூரியன் அஸ்த மிக்கப் போகிறது!
உரிய இடங்களில் நடப்பட்டு விட்டன...
.. வில் வீரர்கள் அணிவகுத்து நிற்கிறார்களா— ஓரிகட் தேவதைக்கு பலி கொடுக்க வேண்டிய தருணம் நெருங்கி விட்டது...
எல்லாம் தயார்!
உனக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பை எண்ணி பெருமைப் படு...! வேறு தேவதைகளை எண்ணாதே— மனதை 'ஓரிகட்' தேவதையின் பால் ஒருமைப் படுத்து... விரைவிலேயே உன் ஆவி அதன் பாதங்களை சென்றடையும்...
தீவட்டிகளை கொளுத்துங்கள்!
உன் இரத்தம் கானினவை புனிதப்படுத்தி நிவோல்பை மக்களை காக்கும்!
அதோ... தீவட்டிகள் கொளுத்தப் பட்டு விட்டன... மலைவாயினுள் புகவிருக்கிறான் சூரியன்!



விழிப்போடு இருங்கள்... சூரியனின் கடைசி கிரணம் பார்வையிலிருந்து மறைந்த அதே கணத்தில் உங்களுடைய விற்களிலிருந்து கருப்பு அம்புகள் பாய வேண்டும்...
ஆகட்டும்!
டம்-டம்-டம்-டம்-டம்
?!
அற்பப் புழுக்கள்!
தாமதிக்க அவகாசமில்லை... உன் துப்பாக்கியை என்னிடம் கொடுத்து விட்டு ஓடிசென்று மற்ற இருவரையும் எச்சரிக்கை செய்!
அதற்கு அவசியமில்லை... அவர்களாகவே வந்து கொண்டிருக்கிறார்கள் பார்!


அங்கே இருக்கிறார்கள்...! விரைந்து வரும்படி நமக்கு சைகை செய்கிறார்கள்.
ம்... மரணத்தின் நிழல் படியவிருக்கிற அறிகுறி தென்படுகிறது இங்கே!
டம்-டம்-டம்-டம்
மாந்திரீகனை நான் கவனித்துக் கொள்கிறேன்... நீ வில்லேந்தி நிற்பவர்களை மிரண்டு ஓடச் செய்து விட்டு விரைந்து சென்று அந்தப் பெண்ணை விடுவிக்க முயற்சி செய்...
ஆகட்டும்!
மறு நிமிடம்...
வேளை வந்து விட்டது...
டுமீல்!
டுமீல்!



பட்!
?!
ஆ...!
விர்ர்ர்ர்...
தைரியமாக இரு டைகர்! உனக்கு பாதுகாப்பாக நானிருக்கிறேன் இங்கே!
யாயா ஆ ஆ... ஹீ ஈ ஈ!
ஆ...வ்! நவஜோஸ்!
அரும்!
?!
டுமீல்! டுமீல்!


டுமீல்!
ஆ...!
யாஹீ ஹீ ஈ ஈ...!
இங்கிருந்து எங்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டிரு கிட்! கார்ஸனும் நானும் ஓடிச் சென்று டைகரோடு இணைந்து கொள்கிறோம்!
டுமீல்!
டுமீல்!
புனித சடங்கை கெடுத்து விட்ட பாவிகளை விடாதீர்கள்— கொல்லுங்கள்
ரொம்பவும் தான் கத்துகிறாய் நீ!


அ...ஹ்!
டுமீல்!
அந்தப் பெண்ணை
அழைத்து விடு
விக்கச் செல்!
ஓடுங்கள்... எல்லோரும்
குடிசையின் பின்னால்
சென்று பதுங்கிக்
கொள்ளுங்கள்!
டுமீல்!
டுமீல்!
ஆ...!
எங்கே ஓடுகிறாய்?
அதோ இருக்கிறது 'காலினை'
உடனே அதைக் கையில்
எடுத்துக் கொண்டு
விடுவது நல்லது!


நாங்களும் வந்து விட்டோம் ...டைகர்!
இந்தப் பெண்ணை விடுவிக்கப் போகிறேன்— எனக்கு பாதுகாப்பு தாருங்கள் தோழர்களே!
ஆண்டவனே! நான் காப்பாற்றப் பட்டு விட்டேன்!
உன் கைகள் இரண்டுக்கும் வேறு வேலை இருப்பதால் அவனை என்னிடம் விட்டு விடு— நான் கவனித்துக் கொள்கிறேன்! அந்தப் பக்கமாக சென்று வளை!
மின்னல் வேகத்தில் நடக்கட்டும்!


கிராமத்தை விட்டு வெளியே செல்லும் பாதையை அடையுங்கள்... அந்த நாய்கள் எண்ணிக்கையில் நான்குதான்! தப்பியோடிவிட முடியாத படி செய்து விட்டால் நசுக்கி விடலாம் சுலபமாக!
ஆனால் நரிவால்பை தலைவனின் திட்டம் செயல்படுத்தப்படு முன் டைகர் டெக்ஸின் ஆலோசனைப்படி மறுபக்கம் சென்று விட்டிருந்தான்...
ஓ நாய்களே... ஒழிந்து போங்கள்!
டுமீல்!
நன்றி தெரிவித்து விட்டு, என்னோடு ஓடிவராமல் மயக்கம் போட்டு விட்டாளே இந்தப் பெண்!


பாதையை ஒட்டியிருந்த கிராமப் பகுதியை நோக்கி பெரும்பாலான ஹவாஸ்பைகள் ஓடுவதை தொலைவிலிருந்த கிட் கவனித்தான்...
விரைந்து செல்லுங்கள்... அவர்கள் தப்பிவிடக் கூடாது!
கிராமத்திலிருந்து வெளியேறும் பாதையை அடைப்பது அவர்களுடைய நோக்கம் போலும்!
விலகிச் செல்லுங்கள்! பின்னாலிருந்து உங்களை மடக்க முயற்சிக்கிறார்கள்!
கேட்டீர்களா
நீ முன்னால் போ... நாங்கள் பின்னா-லிருந்து பாதுகாப்பு தருகிறோம்!
நீங்கள் துப்பாக்கியைப் பயன் படுத்துங்கள்— எனக்கு இது போதும்!
ஆகட்டுமடா... நீவட்டி தடியா!


டுமீல்! டுமீல்!
நல்ல காரியம் செய்தாய்... தோழனே!
டுமீல்! டுமீல்!
முதல் குடிசை பற்றிக் கொண்டு விட்டது... விலகி வாருங்கள்!
ஆ!!!
!!
ஆபத்து... எல்லோரும் ஓடிச் சென்று பாறையின் பின் பதுங்கிக் கொள்ளுங்கள்!


குடிசைகளின் பின்னாலிருந்து அனைவரும் ஓடிவருவதை கவனியுங்கள்!
டுமீல்! டுமீல்!
யாயாஹீஹீச...!
?!
டுமீல்!
அஹ்!
ஹா...!
சத்!
இன்னும் சற்று வேகமாக இந்த அம்பு வந்திருந்தால் என்னை துளையிட்டுச் சென்று விட்டிருக்கும்!



காலினுலை கையில் எடுத்துக் கொள் டைகர்! உடனே நாம் இங்கிருந்து அகன்று விட வேண்டும்!
டமீல்!
ஆ...!
டமீல்!
ஓடி வாருங்கள்... அவர்களை சுலப மாக ஒழித்துக் கட்டிவிடலாம்
அஹ்!
நரிவால்பைகள் கொஞ்சமும் அடங்கியதாகத் தெரியவில்லை!
டமீல்!
டமீல்!


அங்கிள், டைகர்!ஓடிச் சென்று பாதை வளைவில் பதுங்கிக் கொள்ளுங்கள்!
டுமீல்!
ஆ!
அஹ்!
நாசமாகப் போயிற்று! பின் வாங்குங்கள்...! வேறு வழியாகச் சென்று பாலத்தினருகே இவர்களை மடக்குவோம்!
நவஜோ நாய்கள் செத்தொழிய வேண்டும்!
அவர்களிடையே ஒரு செவ்விந்தியன் தென்படுகிறான்


ஹீம்! அவர்களுடைய தலைகளை கொய்து விட்டால் ஹீவால்பை இனத்துக்கே பெருமை ஏற்படும்!
சாதிப்போம்
நம்மிடம் வில்லும், ஊது துப்பாக்கியும் இருக்க அவர்களிடம் சக்தி வாய்ந்த துப்பாக்கிகள் இருந்த போதிலும் 'வானவில்' பாலத்தை அவர்கள் சென்றடைவதற்குள் வளைத்துப் பிடித்து விடும் சாத்தியம் உண்டு!
ஆனால் சீக்கிரமே நன்றாக இருட்டிக் கொண்டு விடுமே?
இருட்டினால் என்ன? சாதாரண நிழலுக்கும் எதிரிகளின் நிழலுக்கும் வேறுபாடு அறியாத்திறனில்லாதவை ஹீவால்பை இனத்தவரின் கண்கள் என நீ நினைக்கிறாயா? அந்த வெள்ளை நாய்களும் அவர்களுடைய நவஜோ தோழர்களும் இந்தப் பகுதிக்கு புதியவர்கள்... நேர் வழியில் செல்வதைத்தவிர வேறு மார்க்கத்தில் செல்லத் துணிய மாட்டார்கள். நாம் குறுக்கு வழியில் முன்னால் சென்று மறைந்திருந்து தாக்கினால் அவர்களை நொடியில் அழித்து விடலாம்!
அங்கே—
இவனுக்கு சுயவுணர்வு திரும்பி விட்டது டெக்ஸ்!
அந்த மட்டிலும் நல்லதுதான்!
இதோ... வந்து விட்டது!
நன்றி! காயம் சிறிதுதான் என்ற போதிலும் வெகுவாக தொல்லைப் படுத்தி விட்டது!


மேலோட்டமாக கிழித்து விட்டிருக்கிறது... அவ்வளவு தான்! சுலபமாக பிடுங்க வந்துவிட்டது!
இனி... பயணத்தை தொடரலாமே!
அவர்கள் நம்மை பின் தொடர்ந்து வரும் அறிகுறியே தென்படவில்லை!
நெருப்பினால் விளையும் சேதத்தை முடிந்த வரை குறைக்கும் முயற்சியில் அவர்கள் தங்களை ஈடு படுத்திக் கொண்டிருக்கக்கூடும்!
என்னையும் உங்களோடு அழைத்துச் செல்லுங்கள்! அவர்களிடம் அகப்பட்டேனென்றால் சித்திரவதை செய்தே என்னைக் கொன்று விடுவார்கள்!
கவலைப்படாதே! மீண்டும் அந்த கொலை கும்பலிடம் ஒப்படைக்கவா உன்னை நாங்கள் அத்தனை சிரமப்பட்டு காப்பாற்றினோம்?
'வானவில்' பாலத்தை சென்றடைய இதை விட்டால் வேறு பாதைகளே கிடையாதா?
பலரும் பயன்படுத்தும் பாதை இதுதான்... ஆனால் மூன்று நான்கு குறுக்கு வழிகள் உள்ளன!
அவைகளை நீ எங்களுக்கு காட்டமுடியுமா?
ஓ...! வாருங்கள் என்னோடு!

F-5.


சிறிது நேரத்திற்குப் பின்—
அதோ... ஒரு பாதை அங்கே தெரியும் கரும் பாறையினை சுற்றிக் கொண்டு போகிறது... மற்ற இரண்டு வழிகள் மலையின் வலப்பக்கம் ஓடுகின்ற நீரோடையை ஒட்டினாற்போல் செல்கின்றன.
அப்படியானால் வாருங்கள் விரைந்தோடிப் போய்விடலாம்! இல்லையேல் எதிர்பாராத ஆபத்துக்களை சந்திக்க வேண்டிவரலாம்!
சும்மா... சும்மா பயமுறுத்தாதே அப்பனே!
உறுதியான கால்கள் வழிநடத்திச் செல்லும். என்னோடு ஓடிவா... டைகர்!
கேட்டாயா... என்னைக் கிழவன் என்று கிண்டல் பண்ணிவிட்டுப் போகிறான் பார் உன் மகன்!
அவன் கிடக்கிறான் விடு ...! சில உண்மைகள் காதில் விழும் போது தெரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமலிருப்பதுதான் விவேகமாகும்!



இதற்கிடையே...
இன்னும் வேகமாக ஓடிவாருங்கள்!
அந்த சைத்தான்களை தப்பவிட்டு விடக் கூடாது!
காலினு'வை திரும்ப கைப்பற்றுவதோடு, ,தல்சாரின் மரணத்துக்கும் மற்ற வீரர்களின் மரணத்துக்கும் அவர்களை பழி வாங்க வேண்டும் புனித சடங்கை கெடுத்து அக்கிரமம் புரிந்த அந்த துஷ்டர்களை கொன்று அவர்களுடைய இரத்தத்தினால் அபிஷேகம் நடத்தி 'ஓரிகட்' தேவதையின் மனத்தை குளிர்விக்க தவறினோமேயானால் ஆயுளுக்கும் நம்மை துரதிர்ஷ்டம் விட்டகலாது!
அவர்களுடைய எல்லையினுள் புகவேண்டிய அவசியம் நேரிட்டாலும் தயங்காது தொடர்ந்து விரட்டிச் சென்று அவர்களை பிணமாக்குவோம்— இது சத்தியம்!
அவர்களுடைய மண்டை ஓடுகள் நாம் புதிதாக எழுப்பும் குடிசைகளின் முகப்பை அலங்கரிக்கச் செய்வோம்!
அதே வேளையில்...
ஓடுகிறோமா... இல்லை பறக்கிறோமா!
முதல் வேளையில் சற்றுநில்!


டெக்ஸ் வில்லரும் கார்ஸனும்
அந்தப்பெண்ணோடு பின்னால்
தொலைவில் வந்து கொண்டி
ருக்கிறார்கள் அவர்கள் வந்து
நம்மோடு. சேர்ந்து கொள்ளும்
வரை சற்று ஓய்வெடுத்துக்
கொள்வோம்!
அருமையான யோசனை!
நிதானமாக சுற்றுப்
புறத்தை நோட்ட
மிடவும் இந்த
ஓய்வு வேளையை
பயன்படுத்தலாம்!
குன்றின் மறுபக்கம் சென்று
பார்த்த கிட் திடுக்கிட்டான்—
கெட்டது காரியம்...!
வகையாக மாட்டிக்
கொண்டு விட்டோம்
டைகர்!
அதோ... இருக்கிறார்கள்!
யாஹீ ஹீசச......!
துப்பாக்கியை
எடுநண்பா!


டுமீல்! டும்.
ஆ...!
யாயாஹா ஆ!
மரண ராகம்!
உச்ச வேகத்தில் அங்கே போய்ச் சேரவேண்டியது அவசியம்,
டும்! டுமீல்! டுமீல்!
நீங்கள் முன்னால் போங்கள் .. நான் மெதுவாக வந்து உங்களோடு சேர்ந்துகொள்கிறேன்!
சரிப்படாது பெண்ணே? பின்தங்கினாயானால் உன் உயிரை குடிக்க வெறி கொண்டலையும் கிராதகர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டு விடுவாய்! சக்தியை ஒன்று திரட்டி எங்களோடு வேகமாக ஓடி வர முயற்சி செய்!
டுமீல்!
எனக்கு பாதுகாப்பு கொடு .. நான் சற்று முன்னால் போய்க் கொள்கிறேன்!



அந்தப் பாறையின் பின்னால் இருக்கிறார்கள்... ம் — சீக்கிரம்
ஆ...வ்!
டுமீல்!
ஹூம்... நம்மிடமும் சில துப்பாக்கிகள் இருந்தால் எத்தனை நன்றாயிருக்கும்?
அந்தப் பன்றிகளின் கவனத்தை திசை திருப்பியவாறு இருவர் இங்கே இருக்கட்டும், மற்றவர்கள் என்னை பின்தொடர்ந்து வாருங்கள்... சரிவில் இறங்கி நீரோடை அருகே நாம் நிலை கொள்வோம்!
சரி...!
எதிரிகளை அழிக்க நரிவால்லைவு வீரர்களுக்கு வெள்ளையர்களின் துப்பாக்கி ஒருபோதும் தேவைப்பட்டதில்லை!
இதற்கிடையே!
கிட்! விபரீதம், எதுமில்லையே?
இதுவரை இல்லை ... ஆனால் விரைந்து நாம் பாலத்தை சென்றடையாவிடில் பேரபாயத்துக்கு உள்ளாகிப்போவது உறுதி!


சரியாகப்பட வில்லையே...!
விரைந்து ஓடி வாருங்கள்... நாமும் அவர்களோடு சேர்ந்து கொண்டு விடலாம்!
!!
இம்முறை நீ உன்னை சற்று கூடுதலாகவே காட்டிக் கொண்டு விட்டாய்...இதோ—
டுமீல்!
?!
ஆ-ஆ...
டுமீல்!
டுமீல்!


மரணத்தின் ஓலம் எதிரொலிக்கிறது இங்கே...
டிங்!
காரிருளில் செத்துப்போனால் ஆவி நிம்மதியிழந்து அலைந்து கொண்டேயிருக்குமாம்... எனவே—
தடை நீங்கிவிட்டது ..! கடைசியாக மீந்து நின்ற ஆசாமியும் உயிர் பிழைத்தால் போதுமென்று விலகி ஓடுகிறான்...
வெல்...டன்!
நரிவால்பைகள் நம்மை முந்திக்கொண்டு சென்று பாலத்தை நாம் கடக்க முடியாதவாறு அடைத்துக்கொண்டு வழிமறிப்பார்களோ என்று தோன்றுகிறது...
நடக்கக் கூடியதுதான்!
உண்மையாகவே...
ம்...சீக்கிரம்!
இன்னும் வேகமாக—


விரைந்து சென்று வழுக்குப் பாறை வழியாக வந்து கொண்டிருக்கும் பிரிவினரோடு சேர்ந்து கொண்டு ஓடையில் இறங்கி குறுக்காக கடந்து செல்லலாம்!
இந்த மாதங்களில் நீரோட்டத்தின் வேகம் அதிகமாக இருக்கக்கூடும்!
எந்த நீரோட்டத்தின் வேகமும் நிஷிவால்பை வீரர்களை அச்சுறுத்தி நிறுத்த முடியாதடா...முட்டாள்!
விரைந்து வாருங்கள்! யாயா ஹா ஹா ஈ ஈ...!
அதே வேளையில்—
கேட்டீர்களா—அது ஷா-யான் விடுக்கும் அழைப்பு! வெள்ளியோடை அருகேயிருந்து வருகிறது குரல்!



ஆற்று வளைவில் நாம் அவர்களோடு இணைந்து கொண்டு விடலாம்... வாருங்கள்!
யாயா ஆ ஆஹீஹீ!
வலப்பக்கம் ஏதோ சலசலப்பு கேட்கிறது... அது என்னவென்று கூர்ந்து கேள் டெக்ஸ்!
எதிரிகளின் நடமாட்டமே தான்!
அவர்களை முந்திக்கொண்டு நாம் பாலத்தை சென்றடையாவிடில் நம் கதி பரிதாபத்துக்குள்ளாகிப் போவது உறுதி!
அடடே... நீ கூட இப்படி பேச ஆரம்பித்துவிட்டால் எப்படி?
எங்கே போயிற்று உன் மன உறுதி... தளராத நம்பிக்கை .. எல்லாம்?
ஹீம், இங்கே வழியில் சூழ்ந்திருக்கும் காரிருள் நம் விதியை பூடகமாகச் சொல்கிறதோ என்றொரு பயம்!
அதே சமயம்...
டைகர்... அருகே நீரோட்டத்தின் சலசலப்பு கேட்கிறது!
மனத்தை தளரவிடாதே!


கடைசி கட்டத்திற்கு வந்தாயிற்று... மூச்சுப்பிடித்து இன்னும்ஒருஓட்டம் ஓடினால் வெற்றிக் கட்டத்தை தொட்டுவிடலாம்!
நீரோட்டம் சற்று தொலைவில் ரொம்ப கீழே இருப்பதாக யூகிக்க முடிகிறது!
குறுக்கு வழி அது என்று தெரியாமல் இருட்டில் நாம் பாட்டுக்கு இஷ்டப்பட்ட திசையில் ஓடிக் கொண்டிருக்கிறோமோ என்னவோ?
அதே சமயம் ... சுமார் நூறு மீட்டர் தொலைவில் கீழே—
யாயாஹீஹீ ..! கரை—இதோ...!
சீக்கிரம்...! அந்த நவஜோ நாய்கள் ஓடி வருகின்ற சப்தம் கேட்கிறது!



நரிவால்பைகளின் பேச்சு அரவம் டெக்ஸாக்கும் அவரது தோழர்களுக்கும் தெளிவாக கேட்டது...
அச்சச்சோ... எதிரிகள் நமக்கு வெகு அருகில் நேர் கீழே இருக்கிறார்கள்!
துப்பாக்கிகளை தயார் நிலையில் பிடியுங்கள்!
பெரிய நதி அல்ல... சிற்றோடை— பாதையை ஒட்டி சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிறது !
டுமீல்!
டைகர், கிட் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு பாலத்தை நோக்கி, நிற்காமல் தொடர்ந்து ஓடுங்கள்... கார்ஸனும் நானும் உங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறோம்!
அந்த விஷப்பாம்புகளின் பிடியில் உங்களிருவரையும் விட்டுவிட்டு ஓடிப்போக எனக்கு துளியும் இஷ்டமில்லை!
ஆகிற காரியமல்ல ! ஏகப்பட்ட நரிவால்பைகள் வேகமாக மேலே ஏறி வருவதை கவனி!
டுமீல்!
ஆஆ...!
?!


அவர்களை குறிவைத்து தோட்டாக்களை சரமாரியாக அனுப்பி வையுங்கள்...!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஆஆ...!
நாசமாகப் போயிற்று...! பதுங்கிக் கொள்ளுங்கள்!
துப்பாக்கியை இயக்கியவாறே முன்னேறி செல்வோம்— நிற்காதீர்கள்...!
விர்ர்ர்...
?!
சைத்தான்கள்...!


நேரா... என்னைக் குறி வைக்கிறார்கள்!
நிற்காமல் ஓடுங்கள்— அந்த மிருகங்களை நான் கவனித்துக் கொள்கிறேன்!
டுமீல்! டுமீல்!
?!
ஆ!
உங்கள் வேகத்துக்கு ஈடு கொடுத்து ஓடி வர எனக்கு முடியவில்லை... என்னை விட்டு விட்டு நீங்களாவது ஓடித் தப்பித்துக்கொள்ளுங்கள்
பைத்தியம் மாதிரி உளறாதே! நன்றாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு ஓட்டம் பிடி!
அந்த பாலம் அதிக தொலைவில் இல்லை .. மனம் தளராதே! பாலத்தை கடந்தபின் வேண்டிய மட்டும் நீ ஓய்வெடுத்துக் கொள்ளலாம்!



ஆனால் அந்த நான்கு நண்பர்களும், ஆபத்து ஏறத்தாழ விலகி விட்டது என்று எண்ணினார்கள் என்றால் அது தவறான கணிப்பாகும்! ஏனெனில் அதே சமயம், பக்கத்து குடியிருப்பிலிருந்த சுமார் நூறு காட்டுவாசிகளுக்கு இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ற செய்தி எட்டியது...
...காஸிறவை திருடிக்கொண்டு எங்கள் மாந்திரீகனையும் கொன்று விட்டு அவர்கள் திரும்பி ஓடிச் சென்று கொண்டிருக்கிறார்கள்...!
அவர்களை வளைத்துப் பிடிப்போம்...வாருங்கள்!
என்னைப் பின்தொடர்ந்து ஓடி வாருங்கள்... அவர்கள் உயிரோடு ஊர் போய் சேரக்கூடாது!
ஆமாம்...!
தல்சார் பாவம்! காஸிறு அவன் வசம் இருந்தும் அதிர்ஷ்டம் கைவிட்டு விட்டது அவனை!
சரியாக சொன்னீர்கள்!
அந்த விக்கிரத்தை நம்மால் கைப்பற்றிவிட முடிந்தால் அதன் பின் என்ன செய்யப் போவதாக உத்தேசம்?
அந்த விக்கிரத்தைத்தானே? ஓ...ஸ்...! அதை பிடுங்க முடிந்தால் நிச்சயம் ஹாசியான் கையில் திரும்ப ஒப்படைக்க மாட்டேன்!



நம்மிடத்திலிருந்து அதைப் பெற சண்டையில் இறங்குவான் ஹரா—யான்!
நான் சென்ஸ்!
நவஜோ ஆட்கள் தாக்குவதற்கு முன் ஹரா—யான் கிராமம் வலிமை வாய்ந்து விளங்கியதென்னவோ உண்மை தான், இப்போது, தீக்கு இரையாகி பல வீரர்கள் கொல்லப்பட்டு சீரழிந்து கிடக்கிறது, நம்மோடு மோதிப்பார்க்க ஹரா—யான் துணியமாட்டான். இக் கணம் முதல் அப்ரே மலைப்பகுதியில் நம்முடைய முரசு வெற்றி முழக்கமிடட்டும்!
இதற்கிடையே...
அவசரப்படாமல் நாம் இன்னும் கொஞ்ச தூரம் நீரோட்டத்தின் போக்கிலேயே சென்றிருந்திருக்க வேண்டும்!
தொலைகிறார்கள்.! அவர்கள் பாலத்தை சென்றடையும் முன் மீதமுள்ள நம் குழுவினர் அனைவரும் அவர்களை தடுத்து நிறுத்திவிட வாய்ப்பு இன்னமும் நிறைய இருக்கிறது!
ஓடி வாருங்கள்...?
சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பின்—
?
வந்தடைந்து விட்டோம்! நமக்கு நேர் கீழே, அதோ— பாதை முடிவடைகிறது! இனி அவர்களை சுலபமாக வளைத்து நிறுத்திவிடலாம்!


தைரியமாக செயல்படுங்கள்!
உங்களில் மூன்று பேர் இந்தப்
பாறைகளை கீழே தள்ளிவிடுங்கள்...
அவர்கள் பாலத்தை நெருங்கவே
முடியாது— அப்படியே முயற்சித்தார்கள்
என்றாலும் நசுங்கி அழிந்து போவார்கள்;
மற்றவர்கள் என்னோடு வாருங்கள்,
பழைய நீர்வீழ்ச்சியருகே கீழே
இறங்கிச் சென்று அந்த நாய்களை
பக்கவாட்டிலிருந்து தாக்கி அழிப்போம்!
ஆகட்டும்...!
இரண்டு நிமிடங்களுக்குப் பின்—
ஹரா—யானின் திட்டம் செயல்படுத்தப்
பட்டது...
டமார்!
ஹே... என்ன விபரீதம் இது?
இடியோசை போல் கடமுடா
என்று மேலே பலத்த
ஓசை கேட்கிறதே!


யாயாஹாஹா.. ஆஞ்!
கட்!
கட்!
தட்!
பாறை சரிவு...!
நரிவால்பைகளின் சேஷ்டையாகத் தானிருக்க வேண்டும் இது!
விழிப்போடு இருங்கள்! ஒரு சிறு பாறை வந்து நம்மீது விழுந்தாலும் அக்கணமே சட்னியாகிப் போவது நிச்சயம்!
ஐயை...யோ!
பணால்!
வாருங்கள்... ஓடிப்போய் மேலே நீட்டிக்கொண்டிருக்கும் அந்தப் பாறையின் அடியில் பதுங்கிக் கொண்டு விடலாம்!


அதே வேளையில்...
அவர்கள் நேர் கீழே இருக்கிறார்கள்— பாதையை அடைக்க பாறைகளை உருட்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!
ஓகோ! அப்படியானால் நவஜோ நாய்கள் இன்னமும் கீழே போய்ச் சேரவில்லை என்று அர்த்தமாகிறது!
காலினனை மீட்ட பெருமை ஹரா—யாருக்கு கிடைக்கவொட்டாமல் நாம் அபகரித்துக் கொண்டு விட இன்னமும் வாய்ப்பிருக்கிறது
ஆமாம்!
அங்கே...
நிலவரம் சரியில்லை, டெக்ஸ்!
நாம் இம்மாதிரி நெருக்கடியான மனவுறுதியை இழந்துவிடலாகாது ...தோழர்களே
சில நிமிடங்களுக்கு மேல் இந்த 'மழை' நீடிக்க சாத்தியமிருக்காது— அது ஓய்ந்ததும் நம் ஓட்டத்தை தொடருவோம்!
அவ்வாறே நம்புவோமாக!
டம்!
டம்!


இதற்கிடையே, ஹா—யான் கமார் பத்து ஹீவால்பை வீரர்களோடு அவர்களை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தான்...
?!
அடங்கி வருகிறது... மீண்டும் நழுவி ஓட தயாராகுங்கள்!
அட... தப்பித்துக்கொண்டு விட்டார்களா? இதோ— நொடியில் ஒழித்துக்கட்டுகிறேன்?
?!
எச்சரிக்கை!
ஆ—ஆ...வ்!


பொறுக்கி நாய்கள்!
பதுங்கிக் கொண்டு விடுங்கள்!
ஆஆ...!
யாயாஹாஆஆ!
எதிர்பார்த்த அளவு மோசமில்லே! ஒரு கூட்டம் மேலேயிருந்து பாறைகளை தள்ளிவிட்டு வழியில் தடை எழுப்பி நம்மை நோக்கி நிறுத்த இன்னொரு கூட்டம் பின்னாலிருந்து தாக்க முன்னேறி வந்திருக்கிறது!
இருட்டும், அவர்களுடைய பெரும்பான்மையும் பான்மையும் இல்லாதிருந்தால் அவர்கள் வெற்றி பெற்றிருக்கூடும்!
அவர்களுடைய பார்வையில் படாதீர்கள்... மேலும் தொடர்ந்து கீழே இறங்கிச் சென்று அவர்களுடைய வழியை மறிப்போம் வாருங்கள்!
அதே கணத்தில்...
கேட்டீர்களல்லவா? அவர்கள் அதிக தொலைவில் இல்லே! வாருங்கள்— வேகமாக?


யாயா ஹாஹாச ஈ—!
அந்த ஓலம்—? நம்மை வேட்டையாட இன்னொரு கூட்டம் வந்து சேர்ந்திருக்கிறது... அல்லது நான்தான் குரலை சரியாக இனம் கண்டு கொள்ளத் தவறி விட்டேனா!
உன் யூகம் கரெக்ட்...?
பாறை சரிவு ஓய்ந்து விட்டது... வாருங்கள் கணமும் தாமதியாது ஓடிப் போய் விடுவோம் இங்கிருந்து...! இரு கூட்டத்தாரின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டால் தப்புவது கடினம்!
நீங்களிருவரும் அந்தப் பெண்ணோடு முன்னால் ஓடிச்சென்று பாலத்தை கடந்து விடுங்கள் . கார்ஸனும் நானும் பின்னாலிருந்து உங்களுக்கு பாதுகாப்பு கொடுத்தவாறு தொடர்ந்து ஓடிவருகிறோம்!
எங்கள் பின்னாலேயே ஓடி வருவதாக வாக்குக் கொடுங்கள்!



சத்தியம்! சரி... புறப்படுங்கள்! எழும் சப்தத்தை வைத்துக் கணித்தால் பெரிய மந்தை அளவு கூட்டம் நம்மை துரத்திவருகிறது என்று தோன்றுகிறது!
சரி... நாங்கள் கிளம்புகிறோம்?
நீ முன்னால் நடகிட்! நான் இந்தப் பெண்ணை தூக்கிக் கொண்டு பின் தொடர்ந்து வருகிறேன்!
நாம் பத்திரமாக பாலத்தை கடந்து அக்கரை சேர ஆண்டவன் துணைபுரியட்டும்?
நாமும் நடையைக் கட்டலாம்... பக்கவாட்டில் மிகுந்த கவனம் செலுத்திக்கொண்டே செல்ல வேண்டியது அவசியம்!
கவலைப்படாதே! என் பார்வையில் எவன் பட்டாலும் மறுகணம் அவனுடைய மூளையை சிதறடித்து விடுவேன்.
இதற்கிடையே,
ம்...இன்னும் வேகமாக ! இதோ— நெருங்கிவிட்டோம்!


அதோ... ஓடுகிறார்கள்!
யாயாஹீஹீ ஈ ஈ—!


நச்சுப் பிராணிகள்— சமீபித்து விட்டார்கள்?
பாலத்தை எட்டிப் பிடிப்பதில் கவனம் செலுத்துங்கள்— அவர்களை மறந்துவிடுங்கள்...
நான் கண்டது பிரமை அல்ல எனில் முதல் வளைவில் எதிரிகள் தென்படுகிறார்கள்!
வேகத்தை உச்சப்படுத்துவோம்.


இதற்கிடையே, சில மீட்டர் தொலைவு கீழே—
?!
உற்சாகம் கொள் டைகர்— அதோ தெரிகிறது பார் பாலம்!


சே... இரத்த நாளங்கள் எல்லாம் வெடித்து விடும் போலிருக்கிறது! ஆனாலும் ஆபத்து எல்லையை கடந்து பாதுகாப்பான பகுதியினுள் பிரவேசிக்க நெருங்கிவிட்டோம் என்ற திருப்தி நெஞ்சை குளிர்விக்கிறது!
கவனம்!
இடப் பக்கம் கவனி--
இதோ... நானும் வந்துவிட்டேன்...
டுமீல்!
ஆ-ஆ...?
டுமீல்!
டுமீல்!
ஆஹ்!
ஆ . வ்!


நிற்காதீர்கள்... ஓடுங்கள்—
பாலத்தை கடந்து செல்லுங்கள்!
டுமீல்! டுமீல்!
சீக்கிரம்...! இதோ—
அவர்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!
வா... நாம் போவோம்! பாலத்தின் மறுபக்கத்தை சென்றடைந்ததும் பாலத்தை நம் தோழர்களும் கடந்து வர பாதுகாப்பு ஏற்படுத்தி கொடுப்போம்!
எழுந்து ஓடி வா... நீயும்!
டுமீல்!


அடுத்த குழு வந்து நம்மை தாக்கத் தொடங்குமுன் இவர்கள் அனைவரையும் எமலோகம் அனுப்பியாக வேண்டும்...!
டுமீல்!
டுமீல்!
செத்தொழியுங்களடா... பன்றிப் பயல்களா! ஆ...!
ஆ...
ஆ-ஆ!
நவஜோஸ் வெறியர்கள் நாசமாகப் போக...!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஓடிப் போய்விட வேண்டும்!
ஆ-ஆ!
டுமீல்!
ஒருவர் பாக்கியிருக்கக் கூடாது... தொடர்ந்து சுட்டு வீழ்த்துங்கள்!
டுமீல்!



டுமீல்! டுமீல்! டுமீல்!
மறு கணம்...
ஓடி வாருங்கள்!
யாஹூஹா ஹீ ஈ!
தொலைந்தோம்...! அடுத்த குழுவினர் பின்னாலிருந்து நெருங்கி வந்து விட்டனர்...! தாமதியாது பாலத்தை நோக்கி ஓடு ...!
நீ..?
யாஹூஹா ஹீ ஈ!
முடிந்தவரை உனக்கு பாதுகாப்பு கொடுத்து விட்டு நானும் தொடர்ந்து ஓடிவந்து விடுகிறேன்
அதிகம் தாமதித்து விடாதே— ஆபத்தாகி விடப் போகிறது!
கவலைப்படாமல் செல் ... ஆபத்து எல்லையை கடந்து விட்டது உறுதியானதும் நானும் பறந்தோடி வந்து விடுவேன்!


ம்... இன்னும் வேகமாக ஓடு கார்ஸன் — அந்த கிராதகர்கள் அடுத்த நிமிடம் இங்கே வந்து சேர்ந்து விடுவது நிச்சயம்!
அவர்களை பிசாசு விழுங்கித் தொலைத்தாலென்ன?
நீயும் ஓடி வந்துவிடு—
?!
அட சைத்தானே என்ன விஷயம் அது— உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?
கேள்வி கேட்க இதுவல்ல... நேரம்... ஓடு.


உன் நோக்கம் என்னவென்று புரிந்து கொள்ள முடியாத மடையன் என்று என்னை எண்ணி விட்டாயா?
என்னை காப்பாற்ற உன்னை பலி கொடுக்க தீர்மானித்து விட்டாயா? ஆனாலும் என்னை நீ சரியாக புரிந்து கொள்ளவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது
இரண்டு பேரும் சேர்ந்து மடிவதால் கூடுதலாக என்ன சாதிக்க முடியும்?... நீ. புறப்பட்டுச் செல்லு ...!
இங்கே செய்யும் விஷமத்தை பாலத்தை கடந்த பின் மறுகரையில் செய்யலாமே— எதிரிகள் நெருங்கிவிட்டார்கள்... எழுந்து ஓடிவா... போய்விடலாம்!
யாயாஹா ஹீ ஈ ஈ
அதோ இருக்கிறார்கள்!
யாஹூ..ஆஆ..!
ஓடு... டெக்ஸ்! இன்னும் எத்தனை பேருடைய குருதி வழிந்தோடப் போகிறதோ இந்தப் பாவ மண்ணில்!
... இந்தப்பக்கமாக செல்வோம்!


சே... பாலத்தை முழுவதுமாக சிதைக்காமல் வந்து விட்டேன்!
அரை குறையாக அறுந்து நிற்கும் அந்தப் பாலத்தின் வழியாக இனி எறும்புகள்தான் பத்திரமாக மறுகரையை சென்றடைய முடியும்!
அந்தப் பக்கம் போய்ச் சேர்ந்து விட்ட கிட், டைகர். அந்தப் பெண் மூவரையும் இந்த கொலைவெறியர்களிட-மிருந்து ஒருவழியாக காப்பாற்றி விட்டோமே 'அது போதும்!
மிகுந்த எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய தருணம் இது...
முதலில் நீ தாக்குதலை தொடங்கு !
நீ சரமாரியாக குண்டுகளை பொழியும் போது நான் என் துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பிக் கொள்கிறேன், பிறகு நான் தாக்குதலை தொடர்கிறேன்... ஒருவர் மாற்றி ஒருவர் தொடர்ந்து தாக்குதலை நடத்தினலன்றி எதிரிகளின் கை ஓங்கிவிடக்கூடும்!
அப்படியே செய்வோம்!


இன்னும் அருகே நெருங்கிச் செல்வோம்— வாருங்கள்...!
என்ன, தைரியம் இருந்தால் என் எதிரே அப்படி நெஞ்சைக் காட்டிக்கொண்டு வருவாய்?
?!
ஆ...!
டுமீல்!
ஒவ்வொரு தோட்டாவும் தவறாது ஒருவனை வீழ்த்த வேண்டும்...!
பதுங்குங்கள்
ஆ...!
ஆ...!


அந்த ஓநாய்களை சமாளித்து தாக்கி அழிக்க நம்வசம் உள்ள ஆயுதங்களால் ஆகாது —சூயுக்தியாக ஏதாவது செய்தால்தான் உண்டு!
நம்மில் சிலர் அவர்களுடைய கவனத்தை இங்கேசர்த்து நிற்க மற்றவர்கள் நைஸாக நழுவி பாறையை சுற்றிவந்து அவர்களை பின்னாலிருந்து தாக்கினால் முடிவு நமக்கு சாதகமாக அமையக்கூடும்
ஆம்!
யார் என்னோடு வருவது?
நாங்கள் வருகிறோம்!
வாருங்கள் கிளம்பிச் செல்வோம்...போர்த்து நிற்கும் இருட்டு நமக்கு உதவக்கூடும்!
அதே சமயம் பாலத்தின் மறு முனையில்...
நாம் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது டைகர்! பாலத்தை கடக்கும்படி நம்மை வற்புறுத்திவிட்டு, நம் பாதுகாப்பை உறுதி செய்ய பாலத்தை அறுத்து விட்டார் பார்..!
... டெக்ஸையும், பிடிவாத குணமுடைய கார்ஸனையும் இங்கிருந்த படியே நம்மாலான முயற்சிகளை செய்து காப்பாற்றுவோம்...வா!


இன்னும் கொஞ்ச நாட்களே பாக்கி... சில தோட்டாக்கள் போதும்!
அப்படி குறைத்து மதிப்பீடு செய்வது எப்போதுமே ஆபத்து.!
அவர்களுக்கு உடம்பெல்லாம் விஷம்... நம் தலையைத் துண்டிக்க எந்த ஒரு உபாயத்தையும் கடைப்பிடிக்கத் தயங்க மாட்டார்கள்...
வலப்பக்கம் மலை உயரமாக நிமிர்ந்து நிற்கிறது... நாம் நிற்குமிடத்தை நெருங்க எதிரே உள்ள பாதையை தவிர வேறு வழி இருக்க முடியாது. பின்னே, எப்படி அவர்கள் நாம் அறியா வண்ணம் அதிரடித்தாக்குதலை நடத்த முடியும்?
என்னைக் கேட்காதே ...!
...அந்த நரிவால்பையனை கேட்க வேண்டும். இது அவர்களுடைய பிராந்தியம் — இந்த மலைப்பகுதி அவர்களுக்கு அத்துபடியாக இருக்கும். நமக்குத் தெரியாத சில தகவல்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும்!
அவர்கள் தலையில் இடிவிழ...!
தேவ...! தோழர்களே— விபரீதமாக எதுவும் நடந்து விடவில்லையே? நலமாகத்தானே இருக்கிறீர்கள்?
ஆமாம்... நீங்கள் விலகிச் செல்லுங்கள். விடிந்ததும் கிராமத்துக்கு சமிக்ஞை அனுப்புங்கள்!


எங்களுடைய பாதுகாப்பை பற்றி கவலை வேண்டாம். ஒரு முழு நாள் தேவைக்கான தோட்டாக்கள் எங்கள் வசம் இருக்கின்றன!
உதவி கோரி சமிக்ஞை அனுப்ப இந்தப் பெண்ணை ஏற்பாடு செய்து விட்டு நாங்கள் இங்கிருந்தவாறே உங்களுக்கு உதவி செய்யத் தீர்மானித்திருக்கிறோம்!
உனக்கு சவாரி செய்யத் தெரியுமல்லவா!
ஓ...!
நல்லது! இங்கிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் திறந்த புல்வெளியில் எங்களுடைய குதிரைகள் நிற்கின்றன... அவற்றில் ஒன்றின் மீது ஏறி கிழக்கு நோக்கிச் செல்... சூரியன் வானில் நன்றாக மேலேறி வந்ததும் பயணத்தை நிறுத்தி பெரிய அளவில் தீ மூட்டி விட்டு காத்திரு!
'எறும்புக் கூடு' பள்ளத்தாக்கின் மேட்டுப்பகுதியில் இருக்கும் எங்களுடைய ஆட்கள் சமிக்ஞையை புரிந்து கொண்டு, துரித நடவடிக்கைகளை மேற்கொள்வர்... அடுத்து நீ என்ன செய்ய வேண்டும் என்று உனக்கே தெரியும்— இல்லையா...!
...தெரியும்!
புறப்படு.! ஒவ்வொரு நிமிடமும் பொன் போன்றது— மறந்துவிடாதே!
போய் வருகிறேன்!


மறுகணம்—
ஹே .. டைகர்— அங்கே கவனி...! நம் தோழர்களுக்கு நேர் மேலே இருக்கும் பெரிய பாறையின் அருகே ஏதோ நடமாட்டம் தெரிகிறதல்லவா!
ஆமாம்... அது எதிரிகளாகத்தானிருக்கும்!
இரகசியமாக பாறையை சுற்றி வந்து நம்மவர்களை பின்னாலிருந்து தாக்குவது அவர்களுடைய நோக்கமாக இருக்கக்கூடும்,
அதுவேதான்...! உத்தேசமாக கணக்கிட்டால் சுமார் 400 மீட்டர் தொலைவு இருக்குமல்லவா...! சோதித்துப் பார்த்து விடலாமா?
செய்வோமே!
டைகரும் கிட்டும் நிதானமாக துப்பாக்கிகளை சரியாக அமைத்துக் கொண்டனர் பின்னர்—
முன்னால் வரும் ஆசாமியை நான் குறிவைக்கிறேன்
இரண்டாவது நபரை நான் தீர்த்துக்கட்டுகிறேன்!
டுமீல்! டுமீல்!


?!
?!
ஆ..ஆ...!
அம்ம ..!
டுமீல்! டுமீல்!
ஐயைய...போ— மோசம் போனோம்!
பின் வாங்கி ஓடுங்கள்!
ஆ..ஆ...!
ஆவ்...!
என்ன விவகாரமோ தெரியவில்லையே...
டைகரும் கிட்டும் நம் தலைக்கு மேலே
குறிவைத்து சலசலப்பை ஏற்படுத்துகிறார்கள்!
நம்மை எதிரிகளிடமிருந்து
காப்பாற்ற ஏதாவது ஒரு
யுக்தியை கையாளுகிறார்களோ
என்னவோ!


அப்போது— அங்கிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில்...
துப்பாக்கிகளின் முழக்கம் கேட்கிறதல்லவா... உங்களுக்கு!
இன்னும் விரைவாகச் செல்வோம் வாருங்கள்— நம் தோழர்கள் சிக்கலில் மாட்டிக்கொண்டு விட்டிருக்கக்கூடும்!
நவஜோஸ்! தெய்வம்தான் எங்களைக் காப்பாற்ற இவர்களை அனுப்பி வைத்திருக்க வேண்டும்!
அதையடுத்து—
பாறை முகட்டின் பின்னே பாலத்தருகே அவர்கள் இருக்கிறார்கள்
ம்...முன்னேறுங்கள்...!


டுமீல்!
டுமீல்!
நமக்கு பின்னால் துப்பாக்கிகளின் சீறல் கேட்கிறது—கனவல்லவே!
அப்படி ஆரவாரத்தோடு வரும் நபர்கள் யாராக இருக்கும் என்று யூகிப்பது ஒன்றும் சிரமமான காரியமல்லதான்
பாலத்தின் மறுபக்கம்...
துப்பாக்கி முழக்கம் எதிர்கரையில் கேட்கிறது பிரமையோ?
இல்லை நிஜம்தான்! எனக்கும் கேட்கிறது... கார்ஸன் !
நவஜோஸ்
பின்னே வேறு யாராக இருக்க முடியும்?
இனி கவலையே கிடையாது...ஹே...?
பதுங்கிக்கொள் !


ஆட்டம் இன்னும் முடியவில்லை!
ஆ...!
டுமீல்!
!!!
வெறிபிடித்த மிருகங்கள்...!
டுமீல்!
முன்னேறுங்கள் — விடாதீர்கள்!
கொஞ்சம் கூட உயிரைப்பற்றி கவலைப்படாமல் எதிரிகளை அழிப்பதே இலட்சியமாக முன்னேறி வரும் அந்த காட்டுமிராண்டிகளை பாரேன்!
யாயாஹீஹீ...!
டுமீல்!
பாவம்— வீரமாக உயிரைவிடப்போகிறார்கள்


அவர்களை எப்படியேனும் தடுத்து நிறுத்தியாக வேண்டும்!
டுமீல்! டுமீல்!
ஆஹ்!
யாயாதஹா ஆஹ்!
ஹவ்... என் துப்பாக்கியின் குழல் கொதிக்கிறது!
தீப்பற்றிக்கொண்டாலும் சுடுவதை மட்டும் நிறுத்தாதே!
திடீரென்று இருபது வீரர்கள் பாலம்வரை நீண்டுகிடந்த திட்டில் தோன்றினார்கள்.
யாயாதஹா!
எச்சரிக்கை டைகர்! மற்றவர்கள் நம் தோழர்களின் பின்னாலிருந்து நெருங்குகிறார்கள்!
டுமீல்!
அவர்களையும் கவனித்து விட்டேன்!


டுமீல்!
டுமீல்!
இடப்பக்கம் இருப்பவர்களை நீ கவனித்துக் கொள் புதிதாக வந்திருப்பவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்
யாஹீஹீ...?
சைத்தான்கள்—பின்னாலிருந்து அம்பெய்கிறார்கள்!
டுமீல்!
பக்கவாட்டில் இருந்தும்தான்
டுமீல்.
உனக்கு எதுவும் கேட்கவில்லையா ...டெக்ஸ்?
டுமீல்!
டுமீல்!
மரண ஓசை தவிர வேறெதுவும் கேட்கவில்லை! ச்சு...! என் துப்பாக்கி காலியாகிவிட்டது!
ஆனால் நம் உதவிக்கு வரும் தோழர்களின் வருகை எனக்கு கேட்கிறது—அதோ வருகிறார்கள் பார்
யாஹூஹூ....!
வந்துவிட்டார்கள்!


யாயாஹீஈ.ஈ.
டுமீல்!
டுமீல்!
ஆ...!
?!
ஆவ்...
தெரியுமா சேதி! இனி உன் நவஜோஸ் எனக்கு மிகமிக நெருங்கிய தோழர்களாகிப் போவது நிச்சயம்!
டுமீல்!
ஹா... ஹா... வாஸ்தவம் தான்!
எதிர்பாராமல் வந்து சேர்ந்த நவஜோஸ் நரிவால்படை-களிடையே அழிவையும் நாசத்தையும் ஏற்படுத்தினர். தறிகெட்டு இங்கும் அங்குமாக ஓடினர் நரிவால்படைகள்.
ஆஆ...!
ஓடிப்போகலாம்...!
தப்பி ஓடுகிறார்கள் —
பார்வையிலிருந்து மறையும்வரை சுடுவதை நிறுத்தக் கூடாது.
டுமீல்!
திரும்பவும் நம்மைத் தாக்கும் எண்ணம் அவர்களுக்கு வரவே கூடாது


இனியும் திரும்பி வர அவர்களுக்கு துணிவிருக்குமென்று நீ நினைக்கிறாயா?
இவ்வளவு பாடம் கற்றுக்கொண்டபின்னரா...? ஊஹூம் ..!
அதே சமயம் ..
ஹலோ.. தோழர்களே—விரைந்து பாலத்தை கடந்து வ்ர முயற்சி செய்யுங்கள்—ஹீவால்பைகள் எக்கணமும் திரும்ப வந்து தாக்கிவிடக்கூடும்!
அவனுடைய அச்சம் நிஜமாகிவிடக்கூடாது
வீணாக அலட்டிக் கொள்வதில் நீங்கள் இருவருமே சளைத்தவர்களில்லை!


ஆனால் பாலத்தின் அருகே வந்ததும்—
இந்தாப்பா தைரியசாலி...! இந்தப் பாலத்தை எப்படி கடக்கப் போகிறோம் என்று நீதான் வழி சொல்லேன்!
ஹா...ம்! கண்களில் நீர் முட்டிக்கொண்டு வருகிறது எனக்கு!
இயந்தைகதானே! இருக்கிற ஒரு கயிறும் அறுந்து விட்டால் நாம் மீன்களுக்கு இரையாக வேண்டியதுதான்
ஹ்ாம் அதற்காகவா இத்தனையும் சாதித்தோம்?
. சரி...நீதான் ஒரு வழி சொல்லேன்!
ம் . பொறு —ஹாங்... இப்படி செய்து விடலாம்...!
என்ன...? முதலில் இறக்கைகளைக் கட்டிக் கொண்டு பறந்து விடலாம் என்கிறாயா?
பலவீனப்பட்டிருக்கும் மேல் கயிற்றை இழுத்துக் கட்டி உறுதியானதாக்கிவிடலாம்!
டெக்ஸின் யோசனை உடனே செயல்படுத்தப்பட்டது... ஒருவர் பின் ஒருவராக பாலத்தை கடந்து மறு கரையை சென்றடைந்தனர்
ம்...நிதானமாக வா கிழவா! அவசரப்பட வேண்டியதே இல்லை!
பாதங்களுக்கு அடியில் தரை எப்போது வரும் என்று மனம் துடிக்கிற துடிப்பு எனக்கல்லவா தெரியும்!



இந்தா —பருகு இதை...தெம்பாக இருக்கும்!
கொண்டா இப்படி—குடுவையை முழுவதுமாக காலி செய்யப்போகிறேன்!
சர்க்கஸில் கம்பி மீது நடக்கிறவர்கள் செய்யும் சாகஸத்தோடு ஒப்பிட்டால் நாம் கயிற்றில் நடந்தது ஏதோ உல்லாசமாக வாக்கிங் போனமாதிரிதான்!
உம்...ம்ம்!
அரைகுறை விவகாரமே எனக்குப் பிடிக்காது
ஹீவால் பைகள் வேறு ஏதாவது மாற்று வழிகள் செய்து கொள்ளும் வரை நம் வழிக்கு வர முடியாது!
அதையடுத்த அனைவரும் "எறும்புக்கூடு" பள்ளத்தாக்கை நோக்கி பயணமாயினர். வழியில் அந்த இளம்பெண்ணையும் உடனழைத்துக் கொண்டனர்...
இரண்டு நாள் பயணத்திற்குப் பின் ஹடான், வசித்து வந்த குன்றினை அவர்கள் நெருங்கிய போது—
அங்கே பாருங்கள்—நாம் வருவதை தெரிந்து கொண்டு சமிக்ஞை அனுப்புகிறார்கள்!
நம் வேட்டையின் வெற்றி—தோல்வியை அறிந்து கொள்ள ஹடான் துடிதுடித்துக் கொண்டிருப்பான்.



அப்படியில்லை — நம் முயற்சி வெற்றி பெற்று விட்டதை ஏற்கனவே நடான் தெரிந்து கொண்டு விட்டிருப்பான்!
அதெப்படி...?
அவனுக்கு எப்படி முன்கூட்டியே தெரியமுடியும்!
என்னைக் கேட்டால் எப்படி...? அவன் ஒரு மாந்திரீகன் என்பதை மறந்து விட்டீர்களா?
சில நிமிடங்களுக்குப் பின்—
மீண்டும் உன்னை பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது நடான்!
என் சிந்தனை முழுவதும் உங்களை விடாது பின் தொடர்ந்து வந்தது... பத்திரமாக நீங்கள் வெற்றியுடன் திரும்பி வந்தது கண்டு என் நெஞ்சம் குளிர்ந்து விட்டது!
மீண்டும் அதன் இருண்ட உறைவிடத்தில் கொண்டு போய் வைத்து விடு! அது வெளியேறிய கணம் தொட்டு ஏகப்பட்ட இரத்தம் சிந்தி விட்டது!
ஆம்!
உங்களுடைய வீரமும் அதற்கு இணையான மதிநுட்பமும் என்னைச் சிலிர்க்க வைக்கிறது!
இனி ஒருபோதும் காலிறு வெளியே வராது என்று உறுதியாக நம்பலாம் நீங்கள்...! எனவே மீண்டும் நாசம் விளையுமோ என்று அஞ்சத் தேவையில்லை?

27
30 MAR 1987







தீபாவளி மலர்
ரூ. 5/-
வருகிறது!

லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்,
முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி - 626 123.
போன்: 1159. வெளியீடு எண்: 27. அச்சிட்டோர்:
முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி - 626 123.

PHONE : Off : 1189
Res : 159

# LION COMICS

Post Box : 55.
SIVAKASI - 626 123

Date 1—7—1986





அன்பார்ந்த வாசகர்களே,

உங்கள் அபிமான 'லயன் காமிக்ஸ்'க்கு இன்று பிறந்த நாள்! மூன்றாவது வயதினுள் கம்பீரமாய் அடியெடுத்து வைக்கப் போகும் நமது சிங்கத்திற்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

நமது 'லயன் காமிக்ஸ்'க்கு பூர்த்தியாகின்ற இரண்டாவது வருடம் ஒரு சாதனை ஆண்டு என்பதில் சந்தேகமேயில்லை! ஒரே வருடத்தில் அரை டஜன் சூப்பர் ஹீரோக்களை அறிமுகப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அவர்களில் பெரும்பான்மையானோரை "கோடை மலர்" எனும் மேடையில் உலா வரச் செய்து அமர்க்களப்படுத்தி விட்டது நம் சிங்கம்!

துப்பறியும் ஜேஸன், டெக்ஸ் வில்லர், இரட்டை வேட்டையர், இரும்புக் கை நார்மன், லக்கி மேன், அதிரடி வீரர் [illegible]... போன்ற சூப்பர் ஸ்டார்களையெல்லாம் உங்களுக்கு சமீபத்தில் அறிமுகம் செய்து வைத்த பெருமை நம் சிங்கத்துக்குத் தானே?

இத்தோடு திருப்தி அடையாமல், இன்னும் பல அட்டகாசமான நாயகர்களை உங்களுக்கும் பரிச்சயமாக்கக் காத்திருக்கிறது நமது "லயன்"! களங்கச் சொன்னதும் வருடத்திற்கு வருடம்—மாதத்திற்கு மாதம்— இதழ்களின் தரத்தைக் கூட்டுவதையும், உங்களுக்கு அருமையான கதைகளை வழங்குவதையுமே குறிக்கோளாய் கொண்டு தொடர்ந்து செயல்படும் லயன்!

பிறந்த நாள் பரிசாய் நமது சிங்கம் எதிர்பார்ப்பது, உங்களது ஆதரவையும், அன்பையும் மட்டுமே! தொடர்ந்து ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு தந்து நமது சிங்கத்தை காமிக்ஸ் உலகின் சூப்பர் ஸ்டாராக இருக்கச் செய்வீர்களென்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு!

வணக்கம்.

அன்புடன்,
ஆசிரியர்.



PRINTERS ★ PUBLISHERS ★ BOOK SELLERS


லயன்
காமிக்ஸ்